11.01.2016

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக திறக்கப்படும் நீரின் அளவு குறைப்பு



மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக திறக்கப்படும் நீரின் அளவு விநாடிக்கு 15 ஆயிரம் கனஅடியிலிருந்து, 12 ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது என பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் அணையிலிருந்து கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய் பாசனத்திற்காக 400 கனஅடி நீர் திறக்கப்படுகிறது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 80.18 அடியாகவும், நீர்வரத்து, 176 கனஅடியாகவும், நீர் இருப்பு 42.13 டி.எம்.சி.,யாக உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விலையில்லா கறவை மாடுகள் திட்டத்தால்தமிழகத்தில் நாள்தோறும் 28 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி

தமிழகத்தில் விலையில்லா கறவை மாடுகள் திட்டத்தால் நாள்தோறும் 28 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு வெண்மை புரட்சி ஏற்பட்டுள்ளது என நிதியமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஞாயிற்றுக்கிழமை கூறினார்.

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் ந.வெங்கடாசலம் தலைமையில் அரசு சார்பில் பள்ளி மாணவ, மாணவியருக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. தேனி மக்களவை உறுப்பினர் ரா.பார்த்திபன் முன்னிலை வகித்தார்.

## தொழில்நுட்பங்களை கடைப்பிடித்தால் உளுந்து சாகுபடியில் அதிக மகசூல்

இதில், கோட்டூர் அரசு தொழில்நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த 130 மாணவ,மாணவியருக்கு விலையில்லா மடிக் கணினிகளை வழங்கி ஓ.பன்னீர்செல்வம் பேசியதாவது: கடந்த 4 ஆண்டுகளில் கல்வித் துறைக்காக தமிழக அரசு மொத்தம் ரூ.86 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கியுள்ளது.

கிராமப்புற மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக தமிழக அரசு விலையில்லா ஆடுகள் மற்றும் கறவை மாடுகளை வழங்கி வருகிறது. இத்திட்டத்தால் தமிழகத்தில் நாள்தோறும் 28 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. இதனால் வெண்மை புரட்சி ஏற்பட்டுள்ளது என்றார் அவர்.

மாவட்ட ஊராட்சிகள் தலைவர் சு.மகாலிங்கம், அரசு சிறப்புத் திட்டங்கள் தனித் துணை ஆட்சியர் பாலகிருஷ்ணன், மாவட்ட அதிமுக செயலர்

டி.டி.சிவக்குமார், மாவட்ட அதிமுக இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை செயலர் ப.ரவீந்திரநாத் குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மாவட்ட வருவாய் அலுவலர் செ.பொன்னம்மாள் வரவேற்றார். பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் ஆனந்தி நன்றி கூறினார்.

## தேனி மாவட்டத்தில் செங்கரும்பின் விலை கடும் உயர்வு:ஒரு கட்டு ரூ.250-க்கு விற்பனை

தேனி மாவட்டத்தில் பொங்கல் சிறப்பு பரிசு தொகுப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் கரும்புத் துண்டு வழங்கப்படுவதால் செங்கரும்பின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. ஒரு கட்டு ரூ.250-க்கு விற்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் சின்னமனூர், பெரியகுளம், ஜெயமங்கலம், மேல்மங்கலம் ஆகிய பகுதிகளில் 3,100 ஏக்கர் பரப்பளவில் செங்கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கிருந்து பொங்கல் பண்டிகையையொட்டி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும், வெளி மாவட்டங்களுக்கும் செங்கரும்பு விற்பனைக்காக அனுப்பப்படும்.

கடந்த சில நாள்களுக்கு முன் இம்மாவட்டத்தில் செங்கரும்பு அறுவடை தொடங்கியுள்ளது. இம்மாதம் 8ஆம் தேதி வரை 12 கரும்புத் தட்டைகள் கொண்ட கட்டு ஒன்று ரூ.160-க்கு விற்பனையானது.

இந்நிலையில் இம்மாதம் 7ஆம் தேதி முதல் மாவட்டத்தில் நியாய விலைக் கடைகள் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு பச்சரி, சர்க்கரை, ரூ.100 ஆகியவற்றுடன் 2 அடி நீளமுள்ள செங்கரும்புத் துண்டு வழங்கப்படுகிறது.

இதற்காக மாவட்ட நிர்வாகம் சார்பில் செங்கரும்பு கொள்முதல் செய்யப்படுவதால் சனிக்கிழமை முதல் செங்கரும்பின் விலை கட்டு

ஒன்றுக்கு ரூ.250 ஆக உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஆனால் பொங்கல் கரும்பு கொள்முதலுக்கு முன்பதிவு செய்திருந்த வியாபாரிகள், திடீர் விலை உயர்வால் கலக்கம் அடைந்துள்ளனர்.

கொள்முதல் விலை உயர்வால் நிகழாண்டில் செங்கரும்பு முன்கூட்டியே அறுவடை செய்யப்படுவதால் மாட்டுப் பொங்கலை முன்னிட்டு வழிபாட்டுக்கு செங்கரும்பு தட்டுப்பாடு ஏற்படும் நிலை உள்ளது என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

## வெள்ளையாபுரத்தில் விலையில்லா ஆடுகள் வழங்கல்

சிவகாசி வட்டம் வெள்ளையாபுரத்தில் ஞாயிற்றுக்கிழமை விலையில்லா வெள்ளாடுகளை அமைச்சர் கே.டி.ராஜேந்திரபாலாஜி பயனாளிகளுக்கு வழங்கினார்.

நிகழ்ச்சியில் 32 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகளை வழங்கி அவர் பேசியதாவது:

கிராமத்தில் உள்ள பெண்களும் பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும் என்ற தொலை நோக்கோடு செயல்படுத்தப்படுவது இந்த திட்டம்.

விலையில்லா வெள்ளாடு வழங்கும் திட்டத்தின் மூலம் பெண்களின் தனிநபர் வருமானம் உயரும். இதனால் அந்த குடும்பத்தின் வாழ்க்கைத் தரம் உயரும். தமிழக முதல்வர் ஏழை, எளிய மக்கள் வாழ்க்கையில் உயர வேண்டும் என்ற நோக்கோடு பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் என்றார்.

நிகழ்ச்சியில் விருதுநகர் மக்களவை உறுப்பினர் டி.ராதாகிஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் கார்த்திகேயன், கால்நடை உதவி மருத்துவர் சுப்பிரமணியம், சிவகாசி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் சி.சுப்பிரமணியம், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்

கருப்பசாமி, வெள்ளையாபுரம் ஊராட்சி மன்றத் தலைவி சந்தானமாரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## பசுந்தேயிலைக்கு உரிய விலை கிடைக்க கிரீன் டீ உற்பத்தி செய்ய அழைப்பு

நீலகிரி மாவட்டத்தில் உள்ள தேயிலை விவசாயிகள் கிரீன் டீ உற்பத்தியில் ஆர்வம் காட்டவேண்டும் என்று சிறு தேயிலை விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

நீலகிரி மாவட்டத்தின் முக்கிய பணப் பயிரான தேயிலை சாகுபடியில் 65 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். இந்தத் தொழிலை நம்பி சுமார் 2 லட்சம் தொழிலாளர்களும், 150 பசுந்தேயிலை கொள்முதல் செய்யும் தொழிற்சாலைகளும் உள்ளன. தேயிலை வர்த்தகர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் இந்தத் தொழிலில் நேரடியாக ஈடுபட்டு வருகின்றனர்.

தேயிலைத் தொழில் லாபகரமாக இருந்தாலும், இதற்கு கச்சாப் பொருளாக விளங்கும் பசுந்தேயிலை சாகுபடி செய்யும் சிறுதேயிலை விவசாயிகளின் வாழ்வாதாரம் மட்டும் கேள்விக்குறியாக உள்ளது.

இந்நிலையில், தேயிலை வாரியத்தின் ஆலோசனையின்படி மாவட்டம் முழுவதும் தேயிலை தரம் குறித்த சிறப்பு முகாம்களும், பயிற்சிகளும் நடத்தப்பட்டன. இதனால் பசுந்தேயிலையின் தரம் அதிகரித்ததால் இம்மாவட்டத்தில் உள்ள ஏல மையங்களில் தேயிலைத் தூளின் விலையும் அதிகரித்தது. ஆனால், ஏல மையங்களில் விற்பனைக்கு ஏற்றார்போல் பசுந்தேயிலைக்கு விலை கிடைப்பது இல்லை என்ற புகார் தொடர்வதுடன் இதன் காரணமாக பெரும்பாலானோர் விவசாயத்தை விட்டு இடம் பெயர்ந்து சென்று விட்டனர்.

இந்நிலையில், கிரீன் டீ மற்றும் ஒயிட் டீ உள்ளிட்ட ரகத் தேயிலைக்கு உலக அளவில் அதிக கிராக்கி உள்ளது. ஆனால், பெரும்பாலானோர் இந்த வகை தேயிலைத் தூளை உற்பத்தி செய்ய முன் வருவது இல்லை.

இம்மாவட்டத்தின் பணப் பயிராக விளங்கி வரும் தேயிலை பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டுள்ளது.

மேலும், தேயிலை சம்பந்தப்பட்ட மதிப்புக்கூட்ட கூடிய பல பொருள்களை தயாரித்து வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ளவும் வாய்ப்புகள் அதிக அளவில் உள்ளன.

இதுகுறித்து நீலகிரி மாவட்ட குறு, சிறு தேயிலை விவசாயிகள் சங்க நிறுவனத் தலைவர் சிவன் கூறியது:

சிறு தேயிலை விவசாயிகள் தங்களது வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ளும் வகையில் விவசாயிகள் தங்களுடைய வீடுகளிலேயே தேயிலைத் தூளை உற்பத்தி செய்து சந்தை படுத்தும் பட்சத்தில் கூடுதல் வருமானம் கிடைக்கும்.மேலும், சிறு விவசாயிகளுக்கு என தனிக் குழு ஏற்படுத்தி அதன் மூலம் சிறு தொழிற்சாலைகள் ஏற்படுத்த வேண்டும்.

மேலும், தேயிலைப் பொருள்கள் மூலம் ரத்த அழுத்தம், கொழுப்பு சத்து, பல் சொத்தை ஆகியவற்றை கட்டுப்படுத்தும் குணமுள்ளதாக மருத்துவ ஆய்வுகள் மூலம் தெளிவு படுத்தப்பட்டுள்ளது. எனவே, கூடுதல் வருமானம் தரும் தேயிலை சார்ந்த பொருள்களை தயாரித்து சந்தைபடுத்த விவசாயிகள் முன்வர வேண்டும்.

இந்தியாவில் தற்போது ஆண்டுக்கு 1 கோடி கிலோ கிரீன் டீ உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் நீலகிரியில் 25 லட்சம் கிலோ மட்டுமே உற்பத்தியாகிறது. துபை உள்ளிட்ட அரபு நாடுகள் மற்றும் வெளிநாடுகளில் கிரீன் டீக்கு அதிக வரவேற்பு உள்ளதால் விவசாயிகள் இந்த ரக தேயிலையை உற்பத்தி செய்ய முன்வர வேண்டும்.

தற்போது வெளிநாட்டினர்

1 கிலோ கிரீன் டீக்கு ரூ. 12 ஆயிரம் வரை விலை கொடுத்து வாங்கத் தயாராக உள்ளனர். எனவே, சர்வதேச சந்தையில் அதிக கிராக்கி உள்ள தேயிலைகளை தயாரிப்பதன் மூலம் பசுந்தேயிலைக்கு உரிய விலை கிடைக்க வாய்ப்புள்ளது என்றார்.

## பசுந்தேயிலை விலை உயர்வு

பசுந்தேயிலை வரத்து குறைந்ததால் அதன் விலை உயர்ந்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் கடந்த மாதம் பரவலாக மழை பெய்து வந்த நிலையில் கடந்த சில நாள்களாக சீதோஷ்ண நிலையில் மாற்றம் ஏற்பட்டு நீர்ப்பனி பொழிவு அதிகரித்து வருகிறது.

இதனால் பசுந்தேயிலையின் மகசூல் குறைந்து வந்ததால் ஏல மையங்களில் தேயிலை தூளின் விற்பனை விலை அதிகரித்து வருகிறது.

ஏல மையங்களுக்கு வரும் தேயிலை தூளும் வாரந்தோறும் தொடர்ந்து விற்பணையாகி வருவதால் பசுந்தேயிலையின் விலையும் உயரத் துவங்கியுள்ளது. இந்த வாரம் சாதாரண ரகப் பசுந்தேயிலை கிலோ ரூ.13 முதல் ரூ. 14 வரையிலும், நடுத்தர ரகம் ரூ. 19 முதல் ரூ. 20 வரையிலும், உயர் ரகம் ரூ. 24 முதல் ரூ. 25 வரையிலும் விலை போனது.

தேயிலை மகசூல் குறைந்து வரும் நிலையில் இந்த வாரம் கிலோவுக்கு ரூ. 3 வரை உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. பசுந்தேயிலையின் விலை உயர்ந்தாலும் விவசாயிகளுக்கு எந்தப் பயனும் இல்லை என விவசாயிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## 18 ஆண்டுக்குப் பிறகு நிரம்பியது சதுப்பேரி கிடா வெட்டி கிராம மக்கள் வழிபாடு

பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சதுப்பேரி 18 ஆண்டுகளுக்குப் பிறகு முழுக் கொள்ளளவை எட்டியதால் மகிழ்ச்சியடைந்த கிராம மக்கள் ஞாயிற்றுக்கிழமை கிடா வெட்டி படையலிட்டு வழிபட்டனர்.

வேலூர் மாவட்டத்தில் அண்மையில் பெய்த தொடர் மழை காரணமாக பெரும்பாலான ஏரிகள் நிரம்பியதோடு பாலாற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. ஆனால் மாநகராட்சிப் பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டத்தை

உயர்த்துவதோடு, 30-க்கும் அதிகமான கிராமங்களின் குடிநீர்த் தேவையையும் பூர்த்தி செய்யும் சதுப்பேரி நிரம்பவில்லை.

எனவே பாலாற்றில் இருந்து விரிஞ்சிபுரம், பொய்கை, அப்துல்லாபுரம் வழியாக ஏரிக்கு வரும் வரத்துக் கால்வாயை தூர்வார அணைக்கட்டு சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினர் ம.கலையரசுவிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகத்தின் கவனத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டதையடுத்து விரிஞ்சிபுரம் பாலாற்றிலிருந்து 7 கி.மீ. தொலைவுக்கு கால்வாய் தூர்வாரப்பட்டது. இதனால் ஏரிக்கு நீர்வரத்து அதிகரித்தது.

இதையடுத்து மாவட்டத்தில் காவேரிப்பாக்கத்துக்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய ஏரியான 1,850 ஏக்கர் பரப்பளவு கொண்ட சதுப்பேரி முழுக் கொள்ளளவை எட்டியது.

சதுப்பேரி நிரம்பியதையடுத்து கிராம மக்கள் ஞாயிற்றுக்கிழமை கிடா வெட்டி படையலிட்டு வழிபாடு நடத்தினர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மழையில் பாதித்த விளை நிலங்களில் வேர்க்கடலை பயிர் சாகுபடி**

பொன்னேரி:நெல் பயிரிடப்பட்டு, மழை வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட விளை நிலங்களில், தற்போது, வேர்க்கடலை பயிரிடும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு உள்ளனர்.ஆரணி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால், பொன்னேரி அடுத்த, ஆண்டார்மடம் கிராமத்தில், ஆற்றின் கரை உடைந்தது. அதன் அருகில் நெல் பயிரிடப்பட்டிருந்த

விளை நிலங்களில் வெள்ள நீர் புகுந்து, நெற்பயிர்களை அடித்து சென்றது.இதனால் விவசாயிகளுக்கு நெல் பயிரிட செலவிட்ட தொகை இழப்பானது. தற்போது, விளை நிலங்களில் வெள்ள நீர் வடிந்து உள்ளது. ஆரணி ஆற்றிலும் மழைநீர் தேங்கியிருப்பதால், விவசாயிகள் மீண்டும் விவசாய பணிகளை துவக்கி உள்ளனர்.பாதிக்கப்பட்ட விளை நிலங்களை உழுது, அதில் வேர்க்கடலை பயிரிடும் பணிகளை மேற்கொண்டு உள்ளனர். அப்பகுதியில், 50 ஏக்கர் பரப்பளவில் தற்போது வேர்க்கடலை பயிரிடும் பணிகள் நடைபெறுகிறது.

இதுகுறித்து, விவசாயிகள் கூறுகையில், "இது சவுடுமண் பகுதியாகும். கோடைகால பயிர் என்பதால், இதற்கு அதிகம் தண்ணீர் தேவைப்படும். ஐந்து ஆண்டுகளுக்கு முன், வேர்க்கடலை பயிரிட்டோம். அதன்பிறகு, ஆற்றில் தண்ணீர் இல்லை. தற்போது தண்ணீர் தேங்கியுள்ளது," என்றார்.

மேலும், "வெள்ளத்தில் எங்களது நெற்பயிர்கள் முழுவதும் அடித்து செல்லப்பட்டன. இதனால் எங்களுக்கு பல லட்சம் ரூபாய் இழப்புதான், இருப்பினும், நிலத்தை தரிசாக போட மனமில்லால், மீண்டும் செலவிட்டு வேர்க்கடலை பயிரிடுகிறோம்," என்றார்.

**'ஸ்பிரிங்லர்' மூலம் தண்ணீர் பாய்ச்சும் பணி**

கூடலூர்: கூடலூர் பகுதியில், பனிப்பொழிவிலிருந்து தேயிலை செடிகளை பாதுகாக்க, விவசாயிகள் 'ஸ்பிரிங்லர்' மூலம் தண்ணீர் பாய்ச்சும் பணியை துவங்கியுள்ளனர்.

கூடலூர் பகுதியில், தொட ரும் பனி பொழிவினால் கடும் குளிர் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, அதிகாலை மற்றும் மாலை நேரத்தில் இதன் தாக்கம் அதிகமாக உள்ளது. பகலில் வெயிலின் தாக்கமும் அதிகம் உள்ளது.

இக்காலநிலை மாற்றத்தால், தேயிலை செடிகள் கருகி, மகசூல் பாதிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதிலிருந்து தேயிலை செடிகளை பாதுகாக்க, 'ஸ்பிரிங்கலர்' மூலம், தண்ணீர் பாய்ச்சும் பணியை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். 'இதன் மூலம், பனி பொழிலிருந்து தேயிலை செடிகளை பாதுகாக்க முடியும்' என, விவசாயிகள் தெரிவித்தனர்.

தோட்டக்கலைதுறை அதிகாரிகள் கூறுகையில், 'பனிப்பொழிவினால், தேயிலை செடிகள் கருகி, மகசூல் பாதிக்கும் அபாயம் உள்ளது. இதனை தவிர்த்து, அதிக மகசூல் பெற, காலை,5:00 முதல் 8:00 மணி வரையிலும், மாலையில், 5:00 மணிக்கு பின்னும் 'ஸ்பிரிங்லர்' மூலம் தேயிலை செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சலாம்' என்றனர்.

**பச்சை மிளகாய் விலை ஏறுமுகம்**

ஒட்டன்சத்திரம்;வரத்து குறைவு காரணமாக ஒட்டன்சத்திரத்தில் பச்சை மிளகாய் விலை கிலோ ரூ.60 க்கு விற்றது.ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்படும் காய்களில் 70 சதவீதத்திற்கும் மேல் கேரளா வியாபாரிகளால் வாங்கப்படுகிறது. சம்பா மற்றும் உருண்டை ரக பச்சை மிளகாய்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. மணப்பாறை பகுதியில் இருந்து உருண்டை ரகமும், உள்ளூரில் இருந்து சம்பா ரகமும் வந்து கொண்டிருந்தன. தொடர் மழை காரணமாக மிளகாய் விளைச்சல் பாதிக்கப்பட்டதால் மகசூல் எதிர்பார்த்தபடி அதிகமாக இல்லை. இதன்காரணமாக மார்க்கெட்டில் கடந்த சில நாட்களாக மிளகாய் வரத்து கணிசமாக குறைந்தது. வரத்து குறைந்ததால், விலை ஏறுமுகமாக காணப்பட்டது. கடந்த வாரம் கிலோ ரூ.40 க்கு விற்ற உருண்டை ரகம் தற்போது ரூ.60 க்கும், ரூ.35க்கு விற்ற சம்பா ரகம் ரூ.45க்கும் விற்கிறது. கமிஷன் கடை உரிமையாளர் ஒருவர் கூறுகையில், "" மழையால் பாதிக்கப்பட்டதால் வரத்து நாளுக்கு நாள் குறைந்து வருகிறது, மழைக்கு

பிறகு நடப்பட்ட பச்சை மிளகாய் வரத்து வரும் போதுதான் விலை குறைய வாய்ப்புள்ளது." என்றார்.

**வெங்காய அறுவடை துவக்கம்**

சங்கராபுரம்: சங்கராபுரம் பகுதியில் சாம்பார் வெங்காய அறுவடையில் விவசாயிகள் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ளனர்.

சங்கராபுரம் அடுத்த கல்வராயன்மலையை சேர்ந்த புதுபாலபட்டு, தும்பை, அரசம்பட்டு பகுதியில் விவசாயிகள் அதிக அளவில் சாம்பார் வெங்காயம் சாகுபடி செய்துள்ளனர். கடந்தாண்டு ஒரு கிலோ 20 ருபாய்க்கு வயலில் விற்பனை செய்யப்பட்டது.

சென்னை, சேலம், திருச்சி, வேலூர் ஆகிய பகுதிகளை சேர்ந்த மொத்த வியாபாரிகள் வயலுக்கு வந்து அறுவடை செய்யும் வெங்காயத்தை வாங்கி சென்றனர். இதனால் விவசாயிகளுக்கு அலைச்சல் குறைந்து, அறுவடை செய்யும் அன்றே பணம் கிடைத்தது. இதனால் மகிழ்ச்சி அடைந்த விவசாயிகள், இந்தாண்டு அதிக அளவில் சாம்பார் வெங்காயம் சாகுபடி செய்துள்ளனர்.

தற்போது வெங்காயம் நன்கு வளர்ந்துள்ளதால், விவசாயிகள் வெங்காய அறுவடைப் பணியை துவக்கி உள்ளனர்.

**விவசாயிகள் ஆலோசனை கூட்டம்**

விக்கிரவாண்டி: விக்கிரவாண்டி வட்டார வேளாண்மை தொழில் நுட்ப குழு மற்றும் விவசாயிகள் ஆலோசனை கூட்டம் நடந்தது.

வேளாண்மை விரிவாக்க அலுவலகத்தில் நடந்த கூட்டத்திற்கு. அட்மா திட்டத் தலைவர் குமாரசாமி தலைமை தாங்கினார். வேளாண்மை உதவி இயக்குனர் செல்வ பாண்டியன் முன்னிலை வகித்தார். தொழில் நுட்ப மேலாளர் சாம்பசிவம் வரவேற்றார் .

கூட்டத்தில், 2015-16ம் ஆண்டிற்கான திட்டங்கள் குறித்தும், தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு, வேளாண்மை வணிகம், பட்டு வளர்ப்பு, மீன் வளர்ப்பு, துறை சார்ந்த பல்வேறு திட்டங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. கால்நடை மருத்துவர் யுவராஜ், தோட்டக் கலை அலுவலர் பாலவித்யா, வேளாண்மை அலுவலர் விஜயசந்தர் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர் .தொழில் நுட்ப மேலாளர் சிட்டிபாபு நன்றி கூறினார்.

**விவசாயிகள் கூட்டம்**

விழுப்புரம்: கண்டமானடியில் சுவாசம் அறக்கட்டளை சார்பில் விவசாயிகள் ஆலோ சனை கூட்டம் நடந்தது.

ஊராட்சி தலைவர் பிருந்தாதேவி தலைமை தாங்கினார். வேளாண் உதவி இயக்குநர் செல்வ சேகர் முன்னிலை வகித்தார். நபார்டு உதவி பொது மேலா ளர் விக்ரமன், வேளாண்மை அலுவலர் கருணாநிதி, வழக்கறிஞர் தோமினிக் சேவியர், அறக்கட்டளை தலைவர் ரவிச்சந்திரன் சிறப்புரையாற்றினர். இதில், இயற்கை விவசாயம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. ஆரணி வேளாண் இயக்குனர் சத்தியமூர்த்தி, கருணாநிதி, டாக்டர் அலெக்சாண்டர் கலந்து கொண்டனர். ஓய்வுபெற்ற டி.இ.ஓ., சீத்தாராமன் நன்றி கூறினார்.

**சிவகங்கை மாவட்டத்தில் சாம்பார் பூசணி சாகுபடி அதிகம் :வெளிமாநிலங்களுக்கு அனுப்பும் வியாபாரிகள்**

சிவகங்கை;சிவகங்கை மாவட்டத்தில் 200 ஏக்கரில் சாம்பார் பூசணி சாகுபடி அதிகரித்துள்ளது. அவற்றை வடமாநில வியாபாரிகள் வாங்கி, சுவீட் தயாரிக்க மும்பைக்கு அனுப்புகின்றனர்.

சிவகங்கை மாவட்டத்தில் 2014ல் போதிய மழை இல்லாத நிலையிலும், தக்காளி,மிளகாய்,வெண்டை, கத்தரிக்காய் 13 ஆயிரம் எக்டேரில்

சாகுபடி செய்யப்பட்டது. 2015ல் ஓரளவு பெய்த மழையால் இப்பயிர்களின் சாகுபடி 14,500 எக்டேராக அதிகரித்துள்ளது.

குறிப்பாக,இளையான்குடி வட்டாரத்தில் திருவள்ளூர், கண்ணமங்கலம்,சோதுகுடி உள்ளிட்ட கிராமங்களில் 200 ஏக்கர் பரப்பளவில் சாம்பார் பூசணி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

விளைச்சல் இந்த ஆண்டு அதிகமாக உள்ளதால், வடமாநில வியாபாரிகள் அதிகம் கொள்முதல் செய்து, மும்பை உள்ளிட்ட பெருநகரங்களுக்கு அனுப்புகின்றனர். அவற்றில் இருந்து ஒரு வகை சுவீட் தயாரிக்கப்படுகிறது. இது தவிர,பஜ்ஜி மிளகாய், கொத்தமல்லி, மல்லிகை, சம்பங்கி பூக்கள் போன்றவற்றின் சாகுபடி பரப்பளவும் அதிகரித்துள்ளது.நோய் தாக்குதல் தோட்டப்பயிர்களை பொறுத்தவரை குறைவாக உள்ளது. அதேபோல் தர்பூசணி விளைச்சலும் இந்த ஆண்டு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வழக்கமாக டிசம்பர், ஜனவரி மாதங்களில் நிலவும் குளிர் சீதோஷ்ண நிலையில் தான் தர்பூசணி சாகுபடி துவங்கும். இந்த ஆண்டு 100 க்கும் அதிகமான ஏக்கரில் தர்பூசணி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவை வரும் ஏப்ரல், மே மாதங்களில் அறுவடைக்கு வந்துவிடும்.இத்தகவலை சிவகங்கை மாவட்ட தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் வெங்கடேஸ்வரன் தெரிவித்தார்.

**சிங்கம்புணரியில் "கிடா'க்களுக்கு பயிற்சி**

சிங்கம்புணரி:சிங்கம்புணரியில் மஞ்சு விரட்டு தடை நீக்கப்பட்டுள்ளதால் போட்டிக்கு "கிடா'க்களுக்கு பயிற்சி நடக்கிறது.இங்கு நீண்ட காலமாக புகழ்பெற்ற அரளிப்பாறை மஞ்சுவிரட்டு நடக்கிறது. மஞ்சு விரட்டுக்காக காளைகளை பலர் வளர்த்தனர். கடந்த காலத்தில் மஞ்சு விரட்டை

முன்னிட்டு ஆட்டுக்கிடா,சேவல் சண்டை நடந்தது. மஞ்சு விரட்டு தடை செய்தபிறகு இப்போட்டிகளும் நின்றது.

மஞ்சு விரட்டு தடை நீங்கிவிட்டதால், மீண்டும் கிடா சண்டை போட்டி நடக்கும் என்ற நம்பிக்கையில் சிங்கம்புணரி யூனியன் ரோட்டைச்சேர்ந்த கார்த்திக் சண்டைக்காக கிடாக்களுக்கு வித்தியாசமான முறையில் பயிற்சியளித்து வருகிறார்.

கோங்கு, கச்சை கட்டி, எட்டையபுரம், குரும்பை, நாட்டுக்கிடா,பெரிய காது,சின்னக்காது கிடாக்கள் சண்டைக்கு ஏற்ற வகையாகும். உளுந்து,கோதுமை தவிடு, இரும்புச்சோளம், கொள்ளு, தேங்காய், வாழைப்பழம் கிடாக்களுக்கு உணவாக வழங்குகின்றனர்.

கிடா வளர்க்கும் கார்த்திக் கூறியதாவது: ஹோட்டல் மேனேஜ்மென்ட் படித்துள்ளேன்.சிறுவனாக இருந்தபோது எனது தாத்தாவுடன் கிடா சண்டைக்கு நானும் செல்வேன்.இதனால் எனக்கு ஆர்வம் ஏற்பட்டது.10 ஆண்டுகளாக சண்டைக் கிடா வளர்க்கிறேன். கிடா உணவுக்கு தினமும் ரூ 50 செலவளிக்கிறேன். மஞ்சு விரட்டு தடைநீங்கும் என்ற நம்பிக்கையில் கிடாக்களுக்கு தீவிர பயிற்சியளித்து வந்தேன்.தடை நீங்கியது மகிழ்ச்சியாக உள்ளது.இனி கிடா சண்டைக்கும் அனுமதி கிடைத்துவிடும், என்றார்.

**மேகங்களை ஈர்த்து மழை பெய்ய தூண்டும் பனை மரங்கள்**

மழையின்மை, நிலத்தடி நீர்மட்டம் குறைந்து தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும்போது தான் மரம் வளர்ப்பின் நன்மையை மக்கள் உணர்கின்றனர். இது போல் வீடுகளில் மரம் வளர்ப்பது, மாடிகளில் காய்கறி தோட்டம் அமைத்து அன்றாட தேவைகளுக்கான கீரை, காய்கறிகளை பெறும் வழக்கம் தற்போது தான் துளிர்விட துவங்கி

உள்ளது. மரம் வளர்ப்பு என்பது நம் முன்னோர்களின் வாழ்க்கை முறையில் ஒன்றாக இருந்தது.

கிராமம் என்றால் நீர்நிலை இருக்கும்.அதை சுற்றி ஆல், அரசு, வேம்பு மரம் இருக்கும். கண்மாய் அமைத்து மழைநீரையும் சேமித்தனர். கண்மாய்கரையில் உயரமாக வளரும் தன்மை உடைய பனைமரங்களை நட்டனர். இது கரைக்கு உறுதிதன்மை கொடுத்தது.

மழை காலத்தில் கரையை உடைத்து தண்ணீர் வீணாவதும் தடுக்கப்பட்டது. இயற்கை ஆர்வலர்கள் கூறுகையில், "பனைமரத்திற்கு குளிர்மேகங்களை ஈர்க்கும் தன்மை உண்டு. கண்மாயை சுற்றி பல மரங்கள் இருப்பதால் கடந்து செல்லும் குளிர்மேகங்களை ஈர்த்து அங்கு மழை பெய்ய செய்யும்,' என்கின்றனர். கண்மாய் நிரம்பும்போது நிலத்தடி நீர்மட்டம் குறையாமல் தடுக்கப்பட்டது.

இந்த முறைகள் பல ஆண்டுகளுக்கு முன் மாறிய நிலையில் ரோடு அமைக்க , கண்மாயை பலப்படுத்த அரசு அமைப்புகளே மரங்களை வெட்ட துவங்கின. தற்போது மழை பெய்யும் அளவு குறைந்ததால் மரங்களின் முக்கியத்துவத்தை அரசு, மக்கள் புரிந்துகொண்டனர். வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம் என திட்டமிடப்பட்டு,அதன்படி மக்களும் ஆங்காங்கே மரக்கன்றுகளை நட துவங்கி உள்ளனர்.

செடிகளுக்கு கோழி கழிவு வேண்டாம்: அழகர் பெருமாள்: (ராஜபாளையம் டி.பி.மில்ஸ் ரோடு கலர் ட்ரீ நிறுவன நிர்வாகி ): ஒரு முறை முதலீட்டில் பல ஆண்டுகள் பயன்தரும் வகையில் தொட்டிகளில் காய்கறி, கீரை, சிறிய மரம் வளர்ப்பு குறித்து ஆலோசனை வழங்கி அதற்கான செடிகளை விற்கிறோம்.

தேங்காய் நார், மாட்டு சாணம், ஆட்டுப்புழுக்கை, மண் சரிவிகிதத்தில் கலந்து பிளாஸ்டிக் தொட்டியில் செடி, மரம் வளர்க்கிறோம். தொட்டியில்

குறைந்த அளவு தண்ணீர் ஊற்றினாலே, ஈரப்பதம் அப்படியே இருக்கும். வெளியில் உள்ள வெப்பம் தாக்காது.

கோழி கழிவுகளை உரமாக பயன்படுத்த கூடாது. தற்போது கோழி வளர்ப்பில் ரசாயணம் பயன்படுத்துவதால் செடிகளுக்கு பாதிப்பு ஏற்படும்.

தக்காளி, மிளகாய், வெண்டை, கீரை போன்றவை வளர்க்கும்போது மூன்று நாளுக்கு ஒருமுறை கீரையை பறித்து "பிரெஷ்ஷாக' சமைத்து சாப்பிடலாம். இதன் மூலம் சுத்தமான காற்று, வீட்டில் குளிர்ச்சி இருக்கும்.

வெளியில் உள்ள வெப்பத்தில் மூன்றுசதவீத வெப்பத்தை குறைக்கும் தன்மை மாடிதோட்டங்களுக்கு உண்டு," என்றார். இவரை 94426 17333 ல்தொடர்புகொள்ளலாம்.

பால்கனியில் அமைக்கலாம் தோட்டம்

தினேஷ் (மாடி தோட்ட ஆலோசகர், ராஜபாளையம் ): வீட்டின் இடவசதி, பட்ஜெட் ஏற்ப மாடி தோட்டம் அமைக்கலாம். பால்கனியில் கூட தோட்டம் அமைக்கலாம். இங்கு கீரை வகைகளை வளர்த்தால் நல்ல பயன் கிடைக்கும். இயற்கை முறையில் ரசாயண கலப்பில்லாத உரத்தை வீட்டிலேயே தயாரித்து பயன்படுத்தலாம். இதன் மூலம் சத்தான கீரை கிடைக்கும். இதனுடன் கத்திரி, வெண்டை, மிளகாய் போன்ற நாட்டுகாய்கறிகள், கருவேப்பிலை, கொத்தமல்லி போன்றவை வளர்த்தால் மார்க்கெட் சென்று காய் வாங்கும் அவசியம் குறையும். ஒரு மாதம் வாடாமல் இருக்கும் ஆர்க்கிட் மலர், சுவீட் ஆரஞ்சு, அம்பலக்காய், பூச்செடிகள்யும் வளர்க்கலாம் .

குளியலறை தண்ணீரை பயன்படுத்தாதீங்க: பிலிப் மாத்யூ< (நீர்மேலாண்மை ஆலோசகர்,ராஜபாளையம்):மாடி தோட்டத்திற்கு ஏற்ப

வடிவமைக்கப்பட்ட பிளாஸ்டிக் தொட்டிகளில் உள்ள தேங்காய் நார், மண் கலவையில் எப்போதும் ஈரப்பதம் இருக்கும். வீட்டில் பயன்படுத்தும் ரசாயண கலப்பில்லாத தண்ணீரை வீட்டை சுற்றி உள்ள மரங்களுக்கு பயன்படுத்தலாம். வீட்டில் கைகழுவும், பாத்திரம் கழிவு தண்ணீர்,குளியலறை தண்ணீரை பைப் லைன் மூலம் மரம், பூச்செடிகளுக்கு பயன்படுத்துகின்றனர். இது கூடாது. நாம் பயன்படுத்தம் சோப், ஷாம்பூ போன்றவற்றில் ரசாயண கலப்பு உள்ளதால் மரம், செடி வளர்ச்சியினை பாதிக்கும். வீட்டு சமையல் கழிவுதண்ணீரை மரத்திற்கு பயன்படுத்துவதால் கொசு உற்பத்தி குறையும்.

தினகரன்

## தமிழகத்துக்கு 30 லட்சம் பேல் பஞ்சு கப்பல் மூலம் கொண்டுவர ஏற்பாடு




கோவை: தென்னிந்திய மில்கள் சங்கம் (சைமா) செயலாளர் செல்வராஜ் கூறியதாவது:தமிழக மில்களின் தேவைக்கான பஞ்சு 60 சதவீதம் குஜராத்தில் இருந்து கொண்டு வரப்படுகிறது. லாரி மூலம் ஒரு பேல் கொண்டு வர ரூ.720 வரை ஆனது. மேலும் ஒரு லாரியில் அதிகபட்சம்

100 பேல் மட்டுமே கொண்டு வர முடியும். ஆனால் ஒரு கப்பலில் 42 அடி நீள கன்டெய்னரில் 180 பேல் பஞ்சு கொண்டு வரலாம். கப்பல் மூலம் கொண்டு வர செலவு குறைந்ததால் கடந்த ஆண்டு கப்பல் வழியாக 10 லட்சம் பேல் பஞ்சு தமிழகத்திலுள்ள பஞ்சாலைகளுக்கு வந்தன. இந்த ஆண்டு கப்பல் மூலம் 30 லட்சம் பேல்கள் வருவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கிடையில், கப்பல் மூலம் சரக்கு போக்குவரத்தை ஊக்குவிப்பதற்காக மத்திய அரசு ஊக்கத்தொகை அளிக்க திட்டமிட்டுள்ளது. இதை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்றார்

**செய்யாறு அருகே தரம் உயர்த்தப்பட்ட கால்நடை மருந்தகம் அமைச்சர் திறந்து வைத்தார்**

செய்யாறு, : செய்யாறு அடுத்த முக்கூர் கிராமத்தில் தரம் உயர்த்தப்பட்ட கால்நடை மருத்துவமனையை அமைச்சர் திறந்து வைத்தார். திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு ஒன்றியம் முக்கூர் கிராமத்தில் பொங்கல் பண்டிகையொட்டி இலவச வேட்டி, சேலை வழங்கும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடந்தது. இதில், மாவட்ட கலெக்டர் அ.ஞானசேகரன் தலைமை தாங்கினார். தாசில்தார் ரெகானா பேகம் அனைவரையும் வரவேற்றார். பின்னர், அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன் 417 பயனாளிகளுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கி பேசினார். அதைத்தொடர்ந்து மழை வெள்ளத்தால் இறந்த முக்கூர் கண்ணன்(80), திருவத்தூர் சந்தானம்(26), விண்ணமங்கலம் அருண்குமார்(28) ஆகியோரின் குடும்பத்தினருக்கு நிவாரண நிதியாக தலா □4 லட்சம் வழங்கினார். முன்னதாக செய்யாறு ஒன்றியம், முக்கூர் கிராமத்தில் உள்ள கிளை கால்நடை மருத்துவமனையை, கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்தப்பட்டு அதன் திறப்பு விழா நடந்தது. நிகழ்ச்சிக்கு மாவட்ட கலெக்டர் அ.ஞானசேகரன் தலைமை தாங்கினார். மருந்தகத்தை அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்.

**திருவண்ணாமலையில் விவசாயிகள் குறைதீர்வு கூட்டம் 22ம் தேதிக்கு ஒத்திவைப்பு**

திருவண்ணாமலை, : திருவண்ணாமலையில் மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்வு கூட்டம் வரும் 22ம் தேதி நடைபெறும் என கலெக்டர் ஞானசேகரன் தெரிவித்தார். திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகத்தில் மாதந்தோறும் 3வது வெள்ளிக்கிழமையன்று, மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்வு கூட்டம் நடைபெறுவது வழக்கம். இந்நிலையில், இந்த மாதம் 3வது வெள்ளிக்கிழமையான வரும் 15ம் தேதி பொங்கல் திருநாளாக அமைந்துள்ளது. எனவே, இந்த மாதம் மட்டும் 3வது வெள்ளிக்கிழமைக்கு மாற்றாக, 4வது வெள்ளிக்கிழமையான வரும் 22ம் தேதி மாவட்ட விவசாயிகள் குறைதீர்வு கூட்டம் நடைபெறுகிறது. எனவே, வேளாண் சார்ந்த குறைகள், கோரிக்கைகள் குறித்த மனுக்களை வரும் 14ம் தேதிக்குள் விவசாயிகள் அனுப்பி வைக்குமாறு கலெக்டர் ஞானசேகரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

**அதிக மகசூலுக்கான கொய்யா சாகுபடி**

நாட்டின் மொத்த பரப்பளவில் கொய்யா உற்பத்தியானது 2.5 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. சுமார் 2.27 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. மண்வளம், தட்பவெப்பம்: வெப்ப, மித வெப்ப மண்டல பயிரான இது, கடல் மட்டத்திலிருந்து 1,500 மீட்டர் உயரமுள்ள பகுதிகளிலும் வளரும். ஆண்டின் மழையளவு ஆயிரம் மிமீ வரை உள்ள இடங்களில் மரத்தின் வளர்ச்சி நன்றாக இருக்கும். இம்மரம் தனது கடின தன்மையால் வண்டல் மண்ணிலிருந்து அனைத்து வகையான மண், காலநிலைகளில் சிறந்து வளர்கிறது. மேலும், நல்ல வடிகால் வசதி உடைய நிலங்களில் சாகுபடி செய்யலாம். இதற்கு மண்ணின் கார அமிலத்தன்மையானது 4.5 முதல் 7.5 சதம் என்ற அளவில் இருக்க வேண்டும். இளஞ்செடிகள் வறட்சி, குளிர்ச்சியை தாங்காது.

ரகங்கள்: லக்னோ 49, அலகாபாத் சபேதா, அரிஜா, ஆப்பிள், பனாராசி, அர்கா, மிர்துளா, அர்கா அமுல்யா, சிட்டிடார், ரெட்பிளஸ், சபேத் ஜாம், கோகிர் சபேதா, லலித், ஸ்வேதா போன்ற ரகங்களை பயிரிடலாம்.நிலம் தயார்படுத்துதல்: கொய்யா பயிரிட இருக்கும் நிலங்களை 2 முதல் 4 முறை உழுது 0.6 மீட்டர் ஆழம், அகலம் என்ற அளவில் குழி தோண்டி மேல் மண்ணுடன் 20 கிலோ தொழுஉரம், 500 கிராம் சூப்பர் பாஸ்பேட் கொண்டு நிரப்ப வேண்டும். கன்றுகளை குழி நடுவே நட்டு மண்ணால் அணைக்க வேண்டும். பருவமழை தொடங்கும்போது நட வேண்டும். அடர்த்தி நடவு: நிலத்தின் தன்மை, மண்வளம், நடவுமுறை பொறுத்து ஏக்கருக்கு 112 செடிவரை நடலாம். எனினும், இது பொதுவாக 3.6 மீட்டரிலிருந்து 5.4 மீட்டர் இடைவெளியில் நடப்படுகிறது. இதில் பழத்தின் எடை, அளவு குறைவாக இருந்தாலும் ஒரு மரத்தின் பழங்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். ஊடுபயிர்கள்: பயறு வகைப் பயிர்களான பச்சை பயிர், உளுந்து, தக்காளி மற்றும் பீட்ரூட் ஊடுபயிர்களாக தொடக்கக் காலகட்டங்களில் பயிரிடுவதன் மூலம் அதிக வருமானம் பெறலாம். சாம்பல் பூசணி, வெள்ளரி, அன்னாசி, பீன்ஸ், முட்டைக்கோஸ் போன்றவற்றை ஊடுபயிராகப் பயிரிடலாம். கவாத்து, சீரமைப்பு: கொய்யா மரங்களில் கவாத்து செய்வதன் மூலம் பழத்தின் தரம், மகசூலை அதிகரிக்க முடியும். காய்களைத் தாங்குவதற்கேற்ப கிளைகளின் வலுவான கட்டமைப்பை உருவாக்குகிறது. இதற்காக, தரைமட்டத்திலிருந்து வெளியே வரும் தளிர்களை 30 செமீ வரை துண்டிக்க வேண்டும். மேலும், 4 தூக்குக் கிளைகளை வளரவிட்டு நடுப்பகுதியைத் திறக்க வேண்டும்.

பயிர் ஒழுங்குபடுத்தல்: பருவகால பயிர் ஒப்பிடுகையில் குளிர்காலத்தில் பயிர்கள் தரம் உயர்ந்தும், அதிக விலைக்கும் போகும். எனவே, விவசாயிகள் பெரும்பாலும் பூக்களைக் கிள்ளிவிடுவதன் மூலம்

பருவகாலப் பயிர்களை தவிர்க்கின்றனர். இதற்காக, மாலிக் அமிலம், நாப்தாலிக் அமிலம் மற்றும் 2.4 டி (30 பிபிஎம்) ஆகியவற்றைப் பயன்படுத்தலாம். மேலும், வேர்களைக் கவாத்து செய்வதன் மூலமும், வேர்களை வெளியே எடுத்து விடுவதன் மூலமும், சில நேரம் கிளைகளை வளைத்துவிடுவதன் மூலமும், தேவையற்ற இலைகளை வெட்டிவிடுவதன் மூலமும் பூக்களை அரும்ப செய்யலாம். பயிர்ப் பாதுகாப்பு: பழ ஈக்களைக் கட்டுப்படுத்த மாலத்தியான் ஒரு லிட்டருக்கு பாஸ்போம்டான் 0.5 மி.லி. மருந்தை நீரில் கலந்து தெளிக்க வேண்டும். மாவுப் பூச்சியை அழிக்க மாலத்தியான் ஒரு லிட்டருக்கு 2 மி.லி மரத்தைச் சுற்றி பாலிதீன் பையைக் கட்டுவதன் மூலம் தடுக்கலாம். நோயைப் பொறுத்தவரை வேரழுகல், இலைப்புள்ளி நோய் அதிக சேதம் ஏற்படுத்தும். இதைக் கட்டுப்படுத்த குயினால் சல்பேட்டை ஊசி மூலம் செலுத்தியும், காப்பர் ஆக்சிகுளோரைடையும் ஒரு லிட்டருக்கு 2 மி.லி. பயன்படுத்தலாம். அறுவடை: பதியன், காற்றடுக்குதல், ஒட்டுக் கட்டுதல் மூலம் நடப்பட்ட மரங்கள் 2 முதல் 3 ஆண்டில் காய்க்கத் தொடங்கும். பொதுவாக, காய்களை பழுக்கும் நிலையில் மரத்தில் தக்கவைக்கக் கூடாது. அடர்பச்சை நிறத்திலிருந்து வெளிறிய பச்சை அல்லது மஞ்சள் கலந்த பச்சை நிறமாக மாறும்போதே அறுவடை செய்ய வேண்டும். ஒட்டுக் கட்டிய ஒரு மரத்திலிருந்து 350 கிலோவரை மகசூல் கிடைக்கும். 5 முதல் 7 ஆண்டுவரை தொடர்ந்து மகசூல் கிடைக்கும். நாற்றுகள் மூலம் சாகுபடி செய்யப்படும் ஒரு மரத்திலிருந்து 90 கிலோ பழங்கள் கிடைக்கும்.

**கீழ்பவானி பாசனப்பகுதியில் இயந்திரம் மூலம் நெல் அறுவடைப்பணி தீவிரம்**

சத்தியமங்கலம், . கீழ்பவானி வாய்க்கால் பாசனப்பகுதியில் இயந்திரம் மூலம் நெல் அறுவடை செய்யும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. பவானிசாகர் அணையிலிருந்து கடந்த ஆண்டு ஆகஸ்ட் 16 ம் தேதி கீழ்பவானி வாய்க்கால் ஒற்றைப்படை மதகுகளுக்கு நன்செய் பாசனத்திற்காக நீர் திறக்கப்பட்டது. இதன் மூலம் ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 1 லட்சத்து 3 ஆயிரத்து ஐநூறு ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இந்நீரை பயன்படுத்தி விவசாயிகள் நெல் சாகுபடி செய்வது வழக்கம். பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், வட்டார வேளாண் விரிவாக்க மையங்கள் மற்றும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் விற்பனை செய்யப்படும் பல்வேறு ரக விதை நெல்லை வாங்கி நாற்றாங்கால் தயார் செய்து பின்னர் நடவு செய்தனர். இந்நிலையில் கடந்த டிசம்பர் 31 ம் தேதி கீழ்பவானி வாய்க்காலில் நீர் திறப்பு நிறுத்தப்பட்டது. இதைத்தொடர்ந்து நெற்கதிர்கள் முற்றியுள்ள நிலையில் அறுவடைப்பணி தொடங்கியது. இதுகுறித்து இப்பகுதி விவசாயிகள் கூறியதாவது. கீழ்பவானி வாய்க்காலில் விடப்பட்டுள்ள நீரை பயன்படுத்தி நெல் பயிரிட்டுள்ளோம். தற்போது நெற்கதிர்கள் முற்றியதாலும், நீர்நிறுத்தப்பட்டதால் வயல்களில் ஈரத்தன்மை குறைந்ததால் நெல் அறுவடை செய்யும் இயந்திரத்தை பயன்படுத்தி அறுவடைப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கென சேலம் மாவட்டம் ஆத்தூர் பகுதியிலிருந்து நெல் அறுவடை செய்யும் இயந்திரங்கள் வந்துள்ளன. ஒருமணி நேரத்திற்கு ரு.1400 இயந்திரத்திற்கு வாடகையாக வசூலிக்கப்படுகிறது. வரப்பின் ஓரத்தில் ஆட்களை பயன்படுத்தி நெல் அறுவடை செய்ய ஏக்கருக்கு ரு.600 செலவாகிறது. 2 மணி நேரத்தில் ஒரு ஏக்கர் அறுவடை செய்யப்படுவதால் இயந்திரத்திற்கு வாடகை ரு.2800 ம் ஆள்கூலி ரு.600 ம் என மொத்தம் ரு.3400 வரை

செலவாகிறது. முழுமையாக ஆட்களை பயன்படுத்தி நெல் அறுவடை செய்ய ரு.10 ஆயிரம் செலவாவதால் விவசாயிகள் இயந்திரத்தை பயன்படுத்தி நெல் அறுவடை செய்வதையே விரும்புகின்றனர் என்று கூறினர்.

**பொங்கலை முன்னிட்டு மாடுகளுக்கு கொம்பு சீவும் பணி தீவிரம்**

சத்தியமங்கலம், . பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஈரோடு மாவட்டம் புஞ்சைபுளியம்பட்டி வாரச்சந்தையில் கால்நடைகளுக்கு தேவையான கயிறுகள் விற்பனைக்காக குவித்து வைக்கப்பட்டுள்ளது. மாடுகளுக்கு கொம்பு சீவும் பணி மும்முரமாக நடந்தது. 18 ஏக்கர் பரப்பளவில் உள்ள புஞ்சைபுளியம்பட்டி நகராட்சி வாரச்சந்தை பொள்ளாச்சிக்கு அடுத்தபடியாக தமிழகத்தின் இரண்டாவது பெரிய சந்தையாகும். இங்கு வாரநாட்களில் புதன்கிழமை மாட்டுச்சந்தையும், வியாழனன்று பொதுசந்தையும் கூடுகிறது. இச்சந்தைக்கு புஞ்சைபுளியம்பட்டி சுற்றுவட்டார கிராம மக்கள் மட்டுமின்றி சேவூர், அன்னூர், அவினாசி, நம்பியூர், சத்தியமங்கலம், பவானிசாகர், சிறுமுகை, மேட்டுப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து விவசாயிகள் அதிக அளவில் வருவது வழக்கம். மாட்டுப்பொங்கலன்று விவசாயிகள் வைத்துள்ள உழவு மாடு, கறவை மாடு, எருமை மாடு, ஆடு உள்ளிட்ட கால்நடைகளுக்கு பழைய கயிறுகளை அகற்றிவிட்டு புதிய கயிறுகள் கட்டி அழகுபடுத்தி பொங்கல் வைத்து வழிபடுவர். பொங்கல் பண்டிகை நெருங்குவதால் மாடுகளுக்கு தேவையான கயிறு வகைகள் மற்றும் கழுத்திற்கு கட்டப்படும் மணிகள் அதிக அளவில் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. தலைக்கயிறு ஜோடி ரூ.80 க்கும், மூக்கணாங்கயிறு ரூ.30 க்கும், தாம்புக்கயிறு ரூ.15 க்கும், கொம்புக்கயிறு ரூ. 20 க்கும், நெத்திகயிறு ரு.20 க்கும், முகர செண்டு ரூ.10 க்கும் விற்பனையானது. இதுதவிர திருகாணி, மணிகள், சலங்கை, வளையம் உள்ளிட்ட பொருட்களும் விற்பனைக்கு குவித்து வைக்கப்பட்டுள்ளது. கயிற்றின் விலை கடந்த ஆண்டை விட 20 சதவீதம் அதிகரித்துள்ளதாக

விவசாயிகள் தெரிவித்தனர். அச்சுவெல்லம், பனைவெல்லம் உள்ளிட்ட பொருட்களும் விற்பனைக்கு வந்துள்ளது. பண்டிகைக்கு ஒருவாரகாலம் உள்ளதால் கரும்பு விற்பனை மந்தமாக உள்ளதாக கரும்பு வியாபாரிகள் தெரிவித்தனர். இதேபோல் மாட்டுச்சந்தையில் உழவு மாடுகள் விற்பனைக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. காங்கயம் காளை மாடுகள் ஜோடி ரு.70 ஆயிரத்திற்கும், மைசூர் மலை இன மாடுகள் ரு.30 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரையும் விற்பனையானது. ஜெர்சி இன பசுமாடு ரு.30 ஆயிரத்திற்கும், முர்ரா ரக எருமைகள் ரு.20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வரையிலும், அடிமாடுகள் 10 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரையிலும் விற்பனையானது. மாட்டுப்பொங்கல் கொண்டாடுவற்கு ஏதுவாக மாடுகளுக்கு கொம்பு சீவும் பணியும் விறுவிறுப்பாக நடைபெற்றது. சீவப்பட்ட கொம்புகளுக்கு வர்ணம் பூசமுடியும் என்பதால் சுற்றுவட்டார பகுதி விவசாயிகள் கொம்பு சீவுவதற்கு அதிக அளவில் மாடுகளை கொண்டு வந்தனர். ஒரு கொம்பு சீவுவதற்கு ரு.50 கூலி என கொம்பு சீவும் தொழிலில் ஈடுபட்டுள்ள கோவை மாவட்டம் காரமடையை சேர்ந்த ரங்கசாமி கூறினார்.

**தோட்டத்தில் சிக்கிய முள் எலி வனத்துறையிடம் ஒப்படைப்பு**

காங்கயம்,: காங்கயம் அடுத்துள்ள வள்ளியரச்சல் ஊராட்சி செட்டியார்பாளையம் பகுதியைச் சேர்ந்தவர் ஆனூர்சௌந்தர்ராஜன். நேற்று இவரது தோட்டத்தின் அருகே சாலையில் முட்கள் நிறைந்த பந்து போன்ற ஒன்று கிடப்பதை கண்டார். சிறிது நேரத்தில் அது ஊர்ந்து சாலையை கடக்க முயன்றது. இதையடுத்து அது பந்து அல்ல முள் எலி என தெரிந்து கொண்ட சௌந்தர்ராஜன் அதை பிடித்து வந்து, காங்கயம் வனத்துறையிடம் ஒப்படைத்தார். வனத்துறையினர் இந்த முள் எலியை காங்கயம் அருகே உள்ள ஊதியூர் மலையில் உள்ள வனப் பகுதியில் விடுவித்தனர்.

**அச்சு , உருண்டை வெல்லம் உற்பத்தி அதிகரிப்பு**

கோபி,: பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஈரோடு மாவட்டத்தில் அச்சு மற்றும் உருண்டை வெல்லம் உற்பத்தி செய்யும் விவசாயிகள் அவற்றின் உற்பத்தி அளவை அதிகரித்து உள்ளனர். சாதாரண நாட்களில் 3 டன் கரும்புகளை அரவை செய்து, அச்சு, உருண்டை வெல்லம் தயாரிக்கும் விவசாயிகள், பொங்கல் பண்டிகைக்கு அவற்றின் தேவை அதிகமாக இருக்கும் என்பதால் 6 டன் கரும்புகளை அரவை செய்து, அச்சு, உருண்டை வெல்லத்தை தயாரித்து வருகின்றனர். இது குறித்து கோபியைச் சேர்ந்த விவசாயி ரவிச்சந்திரன் கூறியதாவது: பொங்கல் பண்டிகையையொட்டி, அச்சு வெல்லம், உருண்டை வெல்லம் தயாரிக்கும் பணி நடந்து வருகிறது. நாள் ஒன்றுக்கு 6 டன் கரும்புகளை அரவை செய்து அச்சு, உருண்டை வெல்லம் உற்பத்தி செய்து வருகிறோம்.

சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வெட்டி விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு பணம் கிடைப்பதில் காலதாமதம் ஆகி வருவதால், சிறிய அளவிலான விவசாயிகள், அவர்களின் தோட்டத்திலேயே கரும்பு அரவை ஆலைகளை அமைத்து, நாட்டு சர்க்கரை, அச்சு வெல்லம், உருண்டை வெல்லத்தை தயாரித்து வருகின்றனர். இதனால் ஈரோடு மாவட்டத்தில் நாட்டு சர்க்கரை உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் உற்பத்தியாகும் நாட்டு சர்க்கரை அதிக அளவில் நாட்டு மருந்து தயாரிப்பதற்காக வாங்கி செல்லப்படுகிறது. மேலும் கடலை மிட்டாய், எள் மிட்டாய், தேன் மிட்டாய் போன்ற இனிப்பு வகை செய்வதற்கும் நாட்டு சர்க்கரை பயன்படுத்தபடுகிறது. கேரளாவில் உள்ளவர்கள் காபி போடுவதற்கு அச்சு வெல்லத்தை பயன்படுத்துவதால், கேரளாவில் இருந்து வரும் வியாபாரிகள் அச்சு வெல்லத்தை வாங்கி செல்கின்றனர். ஆண்டுதோறும் வெல்லம் உற்பத்தி அதிகரித்து வந்தாலும், அவற்றின் விலை உயராதது

சற்று வருத்தம் அளிக்கிறது என்றார். ஈரோடு மாவட்டத்தில் நடைபெறும் நாட்டு சர்க்கரை விற்பனை குறித்து கவுந்தப்பாடி நாட்டு சர்க்கரை மற்றும் வெல்லம் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் ஏ.வி.எம்.பாலசுப்பிரமணியம் கூறியதாவது:கவுந்தப்பாடி சர்க்கரை மார்க்கெட்டில் இருந்து, பழனி முருகன் கோயிலில் பஞ்சாமிர்தம் தயாரிப்பதற்காக மார்கழி மாதம் முதல் தைபூசம் வரை வாரத்திற்கு 10 ஆயிரம் மூட்டை வரை நாட்டு சர்க்கரை வாங்கப்படுகிறது. தற்போது பழனி தேவஸ்தானம் மூலம் டென்டர் விடப்பட்டு, நாட்டு சர்க்கரை வாங்குவதற்கான ஒரு வாய்ப்பு கவுந்தப்பாடி சர்க்கரை மார்க்கெட்டிற்கு கிடைத்துள்ளது. தற்போது நாட்டு சர்க்கரை 60 கிலோ கொண்ட ஒரு மூட்டை 1500 ரூபாய் முதல் 1700 ரூபாய் வரைக்கும், அச்சு மற்றும் உருண்டை வெல்லம் 30 கிலோ கொண்ட ஒரு மூட்டை 900 ரூபாய் முதல் 1000 ரூபாய் வரைக்கும் விற்பனையாகிறது. தற்போது கிடைக்கும் கூலி ஆட்களை விட கூடுதலாக கரும்பு அரவை ஆலை பணிகளுக்கு ஆள் கிடைத்தால் இன்னும் ஈரோடு மாவட்டத்தில் நாட்டு சர்க்கரை, அச்சு வெல்லம், உருண்டை வெல்லம் உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்றார்.

## தொழில்நுட்பங்களை கடைப்பிடித்தால் உளுந்து சாகுபடியில் அதிக மகசூல்

சேதுபாவாசத்திரம், : உளுந்து சாகுபடியில் அதிக மகசூல் பெற சாகுபடி தொழில் நுட்பங்களை விவசாயிகள் கடைபிடிக்க வேண்டும் என சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி ஆலோசனை தெரிவித்துள்ளார். கோடை பருவத்தில் பிப்ரவரி, மார்ச் மாதங்கள் உளுந்து பயிர் சாகுபடிக்கு ஏற்ற தருணமாகும். இதற்கு ஏற்ற ரகம் ஆடுதுறை 5. வம்பன் 5,6. ஐ.டி.யூ 941, ஆகியவையாகும். விதைப்பு செய்தவற்கு முன்பாக விதை மூலம் பரவக்கூடிய வேரழுகல், வாடல் நோய்களை கட்டுப்படுத்துவதற்கு 1 கிலோ விதைக்கு டிரைகோடெர்மா

விரிடி என்ற எதிர் உயிர் பூசானம் 4 கிராம் அல்லது சூடோமோனாஸ் 10 கிராம் அல்லது கார்பன்டாசிம் 2 கிராம் என்ற அளவில் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்ய வேண்டும். பின்னர் ரைசோபியம் என்ற நுண்ணுயிர் உரத்தை 200 கிராம் அத்துடன் அசோஸ்பைரில்லம் 200 கிராம் என்ற உயிர் உரம் சேர்த்து 160 மில்லி ஆறிய அரிசி கஞ்சியுடன் ஒரு ஏக்கருக்கு தேவையான விதையுடன் கலந்து 1 நாள் முழுவதும் நிழலில் உலர்த்தி பின்னர் உயிர் உர நேர்த்தி செய்த விதைகளை 24 மணி நேரத்திற்கு பின் விதைப்பு செய்ய வேண்டும். இதனால் தழைச்சத்து இடுவதை குறைத்து கொள்ளலாம். சாகுபடி செலவு குறைகிறது. தரிசு நிலத்தில் விதைப்பு செய்ய ஏக்கருக்கு 8 கிலோ விதை போதுமானது. நஞ்சை தரிசில் விதைப்பு செய்யும்போது 1 ஏக்கருக்கு 10 கிலோ விதை போதுமானது. இதை அறுவடை செய்வதற்கு 8 லிருந்து 10 நாட்களுக்கு முன்பாக விதை நேர்த்தி செய்து விதைகளை தூவ வேண்டும். அப்போதுதான் அனைத்து விதைகளும் முளைக்கும். இவ்வாறு தொழில் நுட்பங்களை கடைபிடிக்கும்போது எக்டேருக்கு 630 கிலோ வரை மகசூல் பெறலாம். தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டத்தின் கீழ் மானிய விலையில் சான்று பெற்ற உளுந்து விதை விநியோகிக்கப்பட்டு வருகிறது. வம்பன் 5, 6, ஆடுதுறை 5, ஐ.டி.யு 941 ஆகிய உளுந்து விதைகள் வேளாண்மை விரிவாக்க மைய அலுவலகத்தில் போதுமானளவு இருப்பில் உள்ளது. இத்தகவலை வேளாண் உதவி இயக்குனர் பெரியசாமி தெரிவித்துள்ளார்.

**பெரியாறு ஆயக்கட்டில் விரைவில் முறைப்பாசனம் அமல்**

மதுரை, :பெரியாறு ஆயக்கட்டு ஒன்றரை லட்சம் ஏக்கரில் நடவு பணி பெரும்பாலும் முடிந்து விட்டதால், விரைவில் முறை வைத்து அணை தண்ணீர் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. முல்லை பெரியாறு இருபோகம், ஒரு போக ஆயக்கட்டு மற்றும் திருமங்கலம் கால்வாய் உள்பட 1 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் பாசனத்திற்கு வைகை அணையில்

இருந்து கடந்த நவம்பரில் தண்ணீர் திறக்கப்பட்டது. தற்போது பெரும்பாலான பகுதிகளில் நெற்பயிர் நடவு பணிகள் முடிந்துள்ளன. அணைகளில் நீர்மட்டம் வேகமாக இறங்கி வருகிறது. நேற்றைய நிலவரப்படி பெரியாறு அணையில் 134.40 அடியாகவும், வைகையில் 57.58 அடியாகவும் உள்ளது. இதை வைத்து நெற்பயிர் விளையும் வரை 70 நாட்களுக்கு மேல் தண்ணீர் வழங்க வேண்டும். தற்போது பல இடங்களில் தண்ணீர் வீணாகி வருகிறது. கோடையில் குடிநீருக்கும் இருப்பு வைக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. எனவே விரைவில் குறிப்பிட்ட நாட்கள் வீதம் திறந்து, முறைப்பாசனத்தை அமல்படுத்த பொதுப்பணித்துறையினர் முடிவு செய்துள்ளனர். இதற்கான தேதி விரைவில் அறிவிக்கப்படும் என பொறியாளர் ஒருவர் தெரிவித்தார்.

## மானாவாரி நிலத்தில் பருத்தி விவசாயம் வேளாண்துறையினர் ஆலோசனை

பழநி, : மானாவாரி நிலங்களில் பருத்தி விவசாயம் செய்யும்முறை குறித்து வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர். பணப்பயிர்களில் பருத்தி முதன்மை இடத்தில் உள்ளது. உலகளவில் பருத்தி உற்பத்தியில் இந்தியா 2ம் இடத்தில் உள்ள போதிலும், பருத்தியின் உற்பத்தியில் தமிழகத்தில் குறைவாகவே உள்ளது. தமிழகத்தில் உள்ள நூற்பாலைகளுக்கு ஆண்டு ஒன்றிற்கு சுமார் 70 லட்சம் பேல்கள் பஞ்சு தேவைப்படுகின்றன. ஆனால் தமிழகத்தில் அந்தளவிற்கு பருத்தி கிடைப்பதில்லை. இதன் காரணமாக வேளாண்துறையினர் பருத்தி உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகள் பல நவீன சாகுபடி முறைகளை அறிமுகப்படுத்திவருகின்றனர்.

இதுகுறித்து பழநி வேளாண்துறை அதிகாரிகள் கூறுகையில், ‘தமிழகத்தில் குளிர்கால இறவைப் பருத்தி, மானாவாரிப் பருத்தி,

இறவைப் பருத்தி, நெல் தரிசுப் பருத்தி என பருத்தி 4 பருவங்களில் பயிரிடப்படுகிறது. மானாவாரிப் பகுதிகளுக்கு கே 10, கே 11, கே.சி.2, கே.சி.3, எஸ்.பி.பி.ஆர் 3, எஸ்.வி.பி.ஆர் 4, எம்.சி.யு. 5, எம்.சி.யு. 12, பையூர் 1, எல்.ஆர்.ஏ.5166 ஆகிய ரகங்கள் சிறந்தவைகளாக கண்டறிப்பட்டுள்ளன. விவசாயிகள் கோடை உழவு செய்யும்போது நிலத்தின் சரிவுக்கு குறுக்காக உழவு செய்ய வேண்டும். இதனால் வழிந்தோடி வீணாகும் நீர் தடுக்கப்பட்டு உட்கிரகிக்கப்பட்டு விடும். மண்ணின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு தொழுஉரம், மக்கிய குப்பை அல்லது ஆடுமாடுகள் கிடைபோடுதல் ஆகியவற்றை முறையே செய்ய வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு 12.5 டன் தொழுஉரம் இடுவதால், மண்ணின் தன்மை கெடடுவிடாமல் பருத்தியின் விளைச்சலை அதிகமாக பெறலாம். இதனால் மண்ணின் சேமிப்புத் திறனும் அதிகரிக்கின்றது. மண் பரிசோதனையின்படி உரம் இட வேண்டும். இல்லையெனில் பொதுப் பரிந்துரையின்படி ரகங்களுக்கு தகுந்தவாறு உரம் இட வேண்டும். பரிந்துரை செய்யப்பட்ட தழைச்சத்தில் பாதியையும், முழு அளவு மணிச்சத்தையும் அடியுரமாக இடவேண்டும். தொடர்ந்து நூண்ணட்ட கலவையை 12.5 கிலோவை சுமார் 40 கிலோ மணலுடன் கலந்து விதைச்சாலில் தூவ வேண்டும். மண் ஈரம் காக்கும் பொருட்டு மண் போர்வை அமைத்து பயிர் வறட்சியில் வாடுவதைத் தடுக்கலாம். பருத்தியில் அதிகப்படியான நீராவிப் போக்கைக் கட்டுப்படுத்த பராபின் என்ற மெழுகு பொருளை 1% என்ற அளவில் இலைகளில் தெளித்து நீராவிப் போக்கைக் குறைக்கலாம். காய்கள் நன்றாக வெடித்து வரும்போது ஒரு வார இடைவெளியில் பருத்தி அறுவடை செய்ய வேண்டாம். காலை 11 மணிக்குள் பருத்தி அறுவடைய முடித்துவிட வேண்டும். நன்கு வெடித்த பருத்தியை குவியலாகவும், பூச்சிகளினால் சேதமடைந்த பருத்தியை தனிக்குவியலாகவும் வைக்க வேண்டும். இதுதொடர்பான கூடுதல்

விபரங்களுக்கு விவசாயிகள் வேளாண் அலுவலகத்தை அணுகலாமென வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**திண்டுக்கல் பகுதியில் வரத்து குறைவால் கரும்பு விலை உயர்வு கட்டு ரூ.450க்கு விற்பனை**

திண்டுக்கல், : திண்டுக்கல்லில் கரும்பு வரத்து குறைவாக உள்ளதால் ஒரு கட்டு ரூ.450வரை விலை உயர்ந்து விற்கப்படுகிறது. திண்டுக்கல்லை சுற்றியுள்ள சாணார்பட்டி, கோபால்பட்டி, கொசவபட்டி, ராஜக்காப்பட்டி, வெள்ளோடு, சிறுநாயக்கன்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் 500 ஏக்கருக்கு மேல் கரும்பு விவசாயம் நடைபெறுகிறது. 6 அடி வரை உயரமுள்ள திண்டுக்கல் கரும்பு சுவைக்கு பெயர்பெற்றது. அதனால் பல்வேறு மாவட்டங்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்பட்டு வருகிறது. கடந்த பங்குனியில் சாகுபடி செய்யப்பட்ட கரும்புகள் தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகிறது. கடந்தாண்டு போதிய மழை இல்லாமல் வறட்சியின் பிடியில் இருந்ததால், கரும்பு வரத்து தற்போது வெகுவாககுறைந்துவிட்டது.

கடந்தாண்டு இதே சீசனில் 300 டன் கரும்பு வரத்து வந்தது. கட்டு ரூ.300க்கு விற்கப்பட்டது. இந்தாண்டு தற்போது 100 டன் மட்டுமே வரத்து வந்துள்ளது. இதனால் 10 கரும்பு கொண்ட ஒரு கட்டு ரூ.450 வரை விற்கப்படுகிறது. இந்த விலையும் எங்களுக்கு ஆறுதல் விலைதான் என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். இதுகுறித்து கொசவபட்டி விவசாயி இருதயராஜ் கூறுகையில், ‘கடந்தாண்டு கடுமையான வறட்சி ஏற்பட்டது. கிணற்று பாசனம் மூலம் கரும்பு பயிரிடப்பட்டது. உரம், புண்ணாக்கு இவைகளின் விலை உயர்வால் ஏக்கருக்கு ரூ.50 ஆயிரம் செலவு ஆகிறது. தற்போது பெய்த பருவமழையும் திண்டுக்கல் பகுதியில் 5 சதவீதம்தான் பெய்துள்ளது. இதனால் கரும்பு உற்பத்திக்கு அதிகம் செலவாகிறது. எனவே கரும்பு

விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. தற்போது அறுவடை செய்யப்பட்ட கரும்புகள் தரம் பிரிக்கப்பட்டு 10 கரும்பு கொண்ட ஒரு கட்டு ரூ.300 முதல் ரூ.450 வரை விற்கப்படுகிறது. வரத்து குறைவாக உள்ளதால் மேலும் விலை உயர அதிக வாய்ப்பு உள்ளது' என்றார்.

**நத்தம் பகுதியில் மாமரங்களில் மருந்து தெளிக்கும் பணி மும்முரம்**

நத்தம், : நத்தம் பகுதிகளில் பரளி, வத்திபட்டி, லிங்கவாடி, காசம்பட்டி, புதுக்கோட்டை, புன்னப்பட்டி, உலுப்பகுடி,சேர்வீடு, சமுத்திராபட்டி, ஊராளிபட்டி, செந்துறை, மணக்காட்டூர், குட்டுப்பட்டி, சிறுகுடி உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இங்கு சுமார் 10 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் மாமரங்கள் வைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆண்டுக்கு ஒரு தடவை மகசூல் தரும் மாமரங்களுக்கு அதிகம் பராமரிப்பு செலவு கிடையாது. தற்சமயம் மாமரங்களில் பூப் பூப்பதற்கு மருந்துகள் தெளிக்கும் பணி மும்முரம் பெற்று வருகிறது. மேலும் முதல் மருந்து தெளித்தவுடன் பூத்திருக்கும் மாமரங்களுக்கு 2வது தடவை மருந்து தெளிக்கும் பணியும் முழு வீச்சில் நடந்து வருகிறது. இதுகுறித்து இப் பகுதியைச் சேர்ந்த மா, தென்னை, புளி விவசாயிகள் அமைப்புக் குழு தலைவர் வேம்பார்பட்டி கண்ணு முகம்மது கூறுகையில், 'தற்சமயம் கார்த்திகை மாதம் சாரல் மழை பெய்ததை தொடர்ந்து மார்கழியில் பனிப்பொழிவு அதிகம் காணப்படுகிறது. இந்த தருணத்தை பயன்படுத்தி மா விவசாயிகள் தங்கள் மாமரங்களில் அதிகம் மகசூல் பெறுவதற்காக முதலில் பூப்பூப்பதற்கு உகந்த வகையில் முதல் மருந்து தெளிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதைத்தொடர்ந்து காசம்பட்டி, பரளி போன்ற பகுதிகளில் ஆங்காங்கே ஒரு சில மாந்தோப்புகளில் பூக்கள் மரங்களில் பூத்து வருகிறது. இவ்வாறு பூத்திருக்கும் பூக்கள் மரங்களில் உறுதியுடன் நின்று பிஞ்சுகள் வைப்பதற்கு ஏதுவாக இரண்டாவதாக மருந்துகள் தெளிக்க தொடங்கியுள்ளனர். இந்தாண்டு அதிகம் பனிப்பொழிவு காணப்படுவதாலும், மேலும் மருந்து அடிக்கும்

நேரத்தில் மழை இல்லாமலும் இருந்த சூழ்நிலை அதற்கு ஏற்ற வகையில் இருந்தது.இதனால் மாமரங்களில் பெரும்பாலான மரங்கள் பூக்கத் தொடங்கியுள்ளது. மேலும் இதற்கு பின்னர் மரங்களில் மாம்பிஞ்சுகள் வைக்கும்போது அத் தருணத்தில் போதிய மழை பெய்ய வேண்டும். அப்போது மரத்தில் வைக்கும் பிஞ்சுகள் உதிராமல் மகசூல் அதிகம் கிடைக்க வாய்ப்புள்ளது' என்றார்.

**பொங்கல் முதல் திராட்சை விவசாயிகளுக்கு குறுந்தகவல் மூலம் ஆலோசனை**

உத்தமபாளையம், : உத்தமபாளையம் அருகே உள்ள ஆனைமலையன்பட்டியில் திராட்சை ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள தானியங்கி வானிலை ஆய்வு மையத்தில் பொங்கல் முதல் குறுந்தகவல் மூலம் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட உள்ளது.கம்பம்பள்ளத்தாக்கில் காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி, ஆனைமலையன்பட்டி, ராயப்பன்பட்டி, கம்பம், ஓடைப்பட்டி, கூடலூர், கோகிலாபுரம் உள்ளிட்ட ஊர்களில் பன்னீர்திராட்சை விவசாயம் நடக்கிறது.

இங்கு விளையும் திராட்சை சென்னை, திருச்சி, வேலூர், காஞ்சிபுரம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும், கேரளாவிற்கும் விற்பனைக்காக அனுப்பிவைக்கப்படுகிறது. திராட்சை விவசாயத்தில் வெளிநாட்டு தரம் வாய்ந்த திராட்சையை பயிரிடவும், திராட்சை விவசாயத்தை பாதுகாக்கவும் ஆனைமலையன்பட்டியில் திராட்சை ஆராய்ச்சி நிலையம் கட்டப்பட்டு வருகிறது. இங்கு ரூ.15லட்சம் செலவில் தானியங்கி வானிலை ஆய்வுமையம் செயல்பட உள்ளது. இதன் பணிகள் தற்போது முடியும் தருவாயில் உள்ளது. இதன் மூலம் திராட்சைகளை பாதுகாக்க தேவையான ஆலோசனைகள் விவசாயிகளுக்கு மொபைல்களுக்கு எஸ்.எம்.எஸ்.மூலம் தெரிவிக்கப்படும்.

காலச்சூழலுக்கு ஏற்ப என்ன மருந்து தெளிக்கவேண்டும். கவாத்து அடிக்கும்போது செய்யவேண்டிய பாதுகாப்புமுறை, செவட்டை நோயிலிருந்து தற்காத்துகொள்ள ஆலோசனை, மழையளவு, வெப்பஅளவு இதில் மேற்கொள்ளவேண்டிய ஆலோசனைகள் திராட்சை விவசாயிகளுக்கு குறுந்தகவல் மூலம் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தானியங்கி வானிலை ஆய்வு மையத்தில் இதற்கான சாப்ட்வேர் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. சோதனை நடவடிக்கையாக விவசாயிகளின் மொபைல்களுக்கு தகவல்கள் அனுப்பப்பட உள்ளன. இது குறித்து பேராசிரியர்கள் கூறுகையில், 'திராட்சை விவசாயிகளுக்கு தேவையான அத்தனை ஆலோசனைகளையும் குறுந்தகவல் மூலம் அனுப்ப தேவையான சாப்ட்வேர் வானிலை ஆய்வுமையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. பொங்கல் பண்டிகை முதல் இது செயல்படும்' என்றனர்.

**நெற்பயிரில் குலைநோயை தடுக்க ஆலோசனை**

சின்னமனூர், : சின்னமனூர் பகுதியில் நெற்பயிரில் ஏற்பட்டுள்ள குலைநோய் தாக்குதலை தடுக்க வேளாண் அதிகாரி ஆலோசனை கூறியுள்ளார்.தேனி மாவட்டத்தில் சின்னமனூர், வேம்படிக்களம், கே.கே.குளம், மார்க்கயன்கோட்டை, குச்சனூர், துரைச்சாமிபுரம், சீலையம்பட்டி பகுதிகளில் சுமார் 4 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் இரண்டாம்போக நெல் பயிரிடப்பட்டுள்ளது. இதில், தற்போது பெய்யும் கடும்பனியால் நெற்பயிரில் குலைநோய் தாக்கியுள்ளது. இது குறித்து சின்னமனூர் வேளாண் உதவி இயக்குநர் சந்திரசேகரன் கூறுகையில், 'கடந்த ஒரு வாரமாக கடும்பனி பெய்வதால், சின்னமனூர் பகுதியில் தனியார் ரக நெற்பயிரில் பைரி குலேரியா கிரீசியே என்ற பூஞ்சானத்தின் தாக்குதலால் நெற்பயிரில் குலைநோய் ஏற்பட்டுள்ளது. இதனைத் தடுக்க நோயின் ஆரம்ப நிலையில் ஒரு ஏக்கருக்கு ட்ரைசைக்ளோசோல் மருந்து 120 கிராம் அல்லது எடிபன்பாஸ் 200 மி.லி அல்லது ஐசோபுரொதியோலான் 150 மிலி அல்லது கார்பன்டாசிம் 150

மிலி ஏதேனும் ஒரு மருந்தை தெளிக்க வேண்டும். மருந்து தெளித்து 15 நாட்கள் கழித்து மீண்டும் இரண்டாவது முறையாக இதே போல் தெளிக்க வேண்டும். வயலில் குறைந்தளவே நீர் கட்ட வேண்டும். மேலும் விபரங்களுக்கு 04554-246494, 9442703702 என்ற தொலைபேசி மற்றும் அலைபேசியில் அதிகாரிகளை தொடர்பு கொள்ளலாம்' என்றார்.

**நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் திறப்பு**

விருதுநகர்,: மாவட்டத்தில் அரசின் நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் 5 இடங்களில் திறக்கப்பட்டுள்ளன. விற்பனை செய்யப்படும் நெல்லின் பணத்தை விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.விருதுநகர் மாவட்டத்தில் சரசாரி மழையளவான 811.70 மி.மீ மழையை விட டிச. வரையிலான காலத்தில் 888 மி.மீ மழை பெய்துள்ளது. இதனால் மாவட்டத்தில் சுமார் 30 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மழைக்கு முன்கூட்டி நடப்பட்ட நெல் பல இடங்களில் அறுவடை செய்யப்பட்டு வருகிறது. மழையால் பாதிக்கப்பட்ட விளைநிலங்களில் மகசூல் குறைந்துள்ளது. நெல் விளைச்சல் குறைந்த நிலங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். கடந்த மாத இறுதியில் நடந்த விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் புரோக்கர்களிடம் இருந்து விவசாயிகளைக் காப்பற்ற அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை உடனடியாகத் திறக்க வேண்டுமென கோரிக்கை வைக்கப்பட்டது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் விவசாயிகளிடம் இருந்து நெல்கொள்முதல் செய்யும் வகையில் மாவட்டத்தில் சேத்தூர், வத்திராயிருப்பு, கான்சாபுரம், நாலூர், செவல்பட்டி ஆகிய இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.நடப்புப் பருவத்தில் நேரடி நெல்கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடமிருந்து பெறப்படும் சன்னரக நெல் குவிண்டாலுக்கு ஆதார விலை ரூ.1,450, ஊக்கத்தொகை ரூ.70 சேர்த்து ரூ.1,520 வழங்கப்படும். பொதுரக நெல்லுக்கு ஆதார விலை ரூ.1,410,

ஊக்கத்தொகை ரூ.50 சேர்த்து ரூ.1,460 வழங்கப்படும். நெல்கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்குரிய தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும். விவசாயிகள் நேரடி நெல்கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டு வரும்போது நெல்லை தூற்றி சுத்தம் செய்து 17 சதவீத ஈரப்பதத்திற்கு குறைவாகக் கொண்டுவர வேண்டும். நெல்கொள்முதல் தொடர்பான விவரங்களுக்கு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல அலுவலக தொலைபேசி எண் 04562-252607 அல்லது மண்டல மேலாளர் செல் 9442132016 எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என நுகர்பொருள் வாணிப கழக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## சாணார்பட்டி ஒன்றிய பகுதிகளில் கரும்பு விளைச்சல் குறைந்ததால் கூடுதல் விலை கிடைக்கும் விவசாயிகள் எதிர்பார்ப்பு



கோபால்பட்டி

சாணார்பட்டி ஒன்றிய பகுதிகளில் இந்த ஆண்டு கரும்பு விளைச்சல் குறைந்துள்ளதால் கூடுதல் விலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் விவசாயிகள் உள்ளனர்.

<u>கரும்புகள்</u>

திண்டுக்கல் மாவட்டம் சாணார்பட்டி ஒன்றியத்தில் உள்ள கொசவபட்டி, நத்தமாடிப்பட்டி, மஞ்சநாயக்கன்பட்டி, ராகலாபுரம், மணியக்காரன்பட்டி, புங்கம்பாடி உள்ளிட்ட கிராமங்களில் ஆண்டு தோறும் விவசாயிகள் அதிக நிலப்பரப்பில் கரும்புகளை பயிரிடுவார்கள். ஆனால் இந்த பகுதிகளில் கரும்புகளை நடவு செய்த போது போதிய மழை இல்லை. இதனால் ஏராளமானோர் கரும்பு விவசாயத்தில் ஈடுபடவில்லை.

இதனால் ஆண்டு தோறும் சுமார் 150 ஏக்கருக்கும் மேலாக கரும்பு விவசாயம் நடைபெறும் இந்த பகுதிகளில் அது குறைந்து போனது. விவசாய கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகள் வைத்திருப்போர் மட்டும் கரும்புகளை நடவு செய்தனர். இதன்படி தற்போது சுமார் 50 ஏக்கரில் மட்டுமே அவை விளைந்துள்ளன. தற்போது அந்த பகுதியில் விளைந்துள்ள கரும்புகளுக்கு மொத்த வியாபாரிகள் விலை நிர்ணயம் செய்து வருகின்றனர்.

<u>வெட்டும் பணிகள்</u>

அதன்படி 10 கரும்புகள் கொண்ட ஒரு கட்டு ரூ.250 முதல் ரூ.270 வரை பேசி வருகின்றனர். இங்கிருந்து கரும்புகள் வெட்டி கட்டுகளாக மாற்றப்பட்டு லாரிகள் மூலம் திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், கரூர், திருப்பூர், ராமநாதபுரம், ஆர்.எஸ்.மங்கலம் உள்ளிட்ட பல்வேறு ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவது வழக்கம்.

பொங்கல் பண்டிகை நெருங்கியுள்ள நிலையில் கரும்புகளை வெட்டும் பணிகள் நாளை (திங்கட்கிழமை) தொடங்கும் என்று இப்பகுதி விவசாயிகள் கூறினர். மேலும், விளைச்சல் குறைந்துள்ளதால் தங்கள் கரும்புகளுக்கு கூடுதல் விலை கிடைக்கும் என்றும் அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

## ரூ.50 கோடி மதிப்பில் கால்நடை ஆராய்ச்சி மையம் தேர்வு செய்யப்பட்ட இடத்தை அதிகாரிகள் ஆய்வு

அந்தியூர்,

பர்கூர் மலைக்கிராமத்தில் ரூ.50 கோடி மதிப்பில் கால்நடை ஆராய்ச்சி மையம் அமைக்கப்பட உள்ளது. இதற்காக தேர்வு செய்யப்பட்ட இடத்தை அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

<u>கால்நடை ஆராய்ச்சி மையம்</u>

அந்தியூர் ஊராட்சி ஒன்றியம் பர்கூர் ஊராட்சியில் வசிக்கும் மலைக்கிராம மக்களின் முக்கிய தொழில் கால்நடை வளர்த்தல் ஆகும். மலைக்கிராம மக்கள் ஆயிரக்கணக்கான பர்கூர் இன பசு மாடுகள் மற்றும் செம்மைநிற மாடுகளை வளர்த்து வருகின்றனர். கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலங்கள் குறைந்துவிட்டதால் வளர்ப்பவர்களின் எண்ணிக்கையும் குறைந்து வருகின்றன.

அதனால் அவற்றின் இனங்கள் காலப்போக்கில் அழிந்து விடக்கூடாது என்பதற்காக தமிழக கால்நடைத்துறையின் மூலம் ரூ.50 கோடி மதிப்பில் பர்கூர் மலைப்பகுதியில் கால்நடை ஆராய்ச்சி மையம் அமைக்க முடிவு செய்யப்பட்டது. இதைத்தொடர்ந்து கால்நடை ஆராய்ச்சி மையம் கட்ட தட்டகரை மலைக்கிராமத்தில் 50 ஏக்கர் பரப்பளவில் பர்கூர் ஊராட்சி சார்பில் இடம் தேர்வு செய்யப்பட்டது.

<u>அதிகாரிகள் ஆய்வு</u>

இதையடுத்து தேர்வு செய்யப்பட்ட இடத்தை சென்னை கால்நடைத்துறை ஆராய்ச்சி மைய துணை வேந்தர் டாக்டர் திவாகர் மற்றும் இயக்குனர்கள் ரமேஷ், சரவணக்குமார் மற்றும் கால்நடை மண்டல இணை இயக்குனர் ரவிச்சந்திரன் ஆகியோர் நேற்று பார்வையிட்டனர்.

அப்போது அவர்கள் குடிநீர் வசதி, இடவசதி, போக்குவரத்து வசதி பற்றி ஆய்வு செய்தனர். இந்த ஆய்வின் போது பர்கூர் ஊராட்சி தலைவர் ராஜம்மாள் ஹரிதாஸ், பர்கூர் ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் ராயண்ணன் ஆகியோர் அவர்களுடன் சென்றனர்.

## பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வெல்லம் விலை உயர்வு கரும்பு விவசாயிகள் மகிழ்ச்சி



நொய்யல்,

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வெல்லம் விலை உயர்ந்துள்ளது. இதனால் கரும்பு விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கரும்பு விவசாயிகள்

கரூர் மாவட்டம், முத்தனூர், கவுண்டன்புதூர், நடையனூர், கரைப்பாளையம், நொய்யல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் விவசாயிகள் கரும்பு பயிரிட்டுள்ளனர். நிலத்தில் கரணை பதித்தவுடன் பல விவசாயிகள் புகளூரில் உள்ள தனியார் சர்க்கரை ஆலைக்கு கரும்பு வெட்டி செல்வதற்கு பதிவு செய்கின்றனர். பதிவு செய்யாத விவசாயிகள் கரும்பு விளைந்தவுடன் பல்வேறு பகுதிகளில் உள்ள வெல்லம் தயாரிக்கும் ஆலை அதிபர்களுக்கு டன் ஒன்றுக்கு ரூ.1,400 வரை விற்பனை செய்கின்றனர். வாங்கிய கரும்புகளை இயந்திரத்தின் மூலம் சாறு பிழிந்து இரும்பு கொப்பரையில் ஊற்றி காய வைத்து சரியான பதம் வந்து பாகு ஆனவுடன், மர

அச்சுத்தொட்டியில் ஊற்றி உலரவைத்து குப்பிர கவிழ்த்தி மர சுத்தியால் தட்டுகின்றனர். அதிலிருந்து அச்சு வெல்லம் மள, மளவென விழுகிறது.

விலை உயர்வு

அதேபோல் மரத்தொட்டியில் கரும்பு பாகுவை ஊற்றி உலர வைத்து துணிகள் மூலம் உருண்டை பிடித்து உருண்டை வெல்லம் தயாரிக்கின்றனர். பின்னர் நன்கு உலர வைத்து சாக்குகளில் 30 கிலோ கொண்ட சிப்பங்களாக தயார்செய்கின்றனர். தயார் செய்யப்பட்ட வெல்ல சிப்பங்களை வியாபாரிகள் வாங்கி லாரிகள் மூலம் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பிவைக்கின்றனர். கடந்த வாரத்தில் 30 கிலோ கொண்ட உருண்டை வெல்லம் ஒரு சிப்பம் ரூ.950–க்கும், அச்சு வெல்லம் ரூ.1,000–க்கும் வியாபாரிகள் வாங்கி சென்றனர். இந்த வாரம் வியாபாரிகள் 30 கிலோ கொண்ட ஒரு சிப்பம் உருண்டை வெல்லம் ரூ.1,050–க்கும், அச்சு வெல்லம் ரூ.1,150–க்கும் வாங்கி சென்றனர். பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வெல்லம் விலை உயர்ந்துள்ளது. இதனால் கரும்பு பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## இரண்டாம் போக பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு 11,408 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது



கிருஷ்ணகிரி அணை மற்றும் பாரூர் பெரிய ஏரியில் இருந்து இரண்டாம் போக பாசனத்திற்கு 11,408 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் வகையில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. தண்ணீர் திறப்பு தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதாவின் ஆணைப்படி கிருஷ்ணகிரி அணையில் இருந்து இரண்டாம் போக பாசனத்திற்கு நேற்று தண்ணீர் திறந்துவிடும் நிகழ்ச்சி நடந்தது. இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட கலெக்டர் ராஜேஷ் தலைமை தாங்கினார். விழாவில் உயர்கல்வித்துறை அமைச்சர் பி.பழனியப்பன் கலந்து கொண்டு தண்ணீரை திறந்து வைத்தார். பின்னர் அமைச்சர் பி.பழனியப்பன் நிருபர்களிடம் கூறியதாவது:- ஒத்துழைப்பு வழங்குங்கள் தமிழக முதல்-அமைச்சர் ஆணைப்படி இன்றைய தினம் கிருஷ்ணகிரி அணையில் இருந்து 2-ம் போக பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி அணையின் மொத்தம் உயரம் 52 அடி. தற்போது அணையில் முழு

கொள்ளளவான 52 அடி தண்ணீர் உள்ளது. இந்த நிலையில் தற்போதுள்ள நீர் அளவினை கொண்டும், அணைக்கு வரும் நீரினை கொண்டு இடதுபுற கால்வாய் மூலம் வினாடிக்கு 80 கன அடி தண்ணீரும், வலதுபுற கால்வாய் மூலம் 75 கன அடி தண்ணீர் என மொத்தம் 155 கன அடி தண்ணீரும் திறந்து விடப்பட்டுள்ளது. தொடர்ந்து 110 நாட்களுக்கு இந்த தண்ணீர் திறந்து விடப்படும். இதன் மூலம் கிருஷ்ணகிரி தாலுகாவில் உள்ள பெரியமுத்தூர், சுண்டேகுப்பம், திம்மாபுரம், சவுட்டஅள்ளி, தளிஅள்ளி, கால்வேஅள்ளி, குண்டலப்பட்டி, மிட்டஅள்ளி, எர்ரஅள்ளி, பெண்ணேஸ்வரமடம், காவேரிப்பட்டணம், பாலேகுளி, மாரிசெட்டிஅள்ளி, நாகோஜனஅள்ளி, ஜனப்பரஅள்ளி மற்றும் பையூர் ஆகிய 16 ஊராட்சிகளில் உள்ள பல்வேறு கிராமங்களுக்குட்பட்ட 9,012 ஏக்கர் நஞ்சை நிலம் பாசன வசதி பெறும். எனவே விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி, அதிக மகசூல் பெற வேண்டும். நீர் பங்கீட்டு பணிகளில் பொதுப்பணித்துறையினருக்கு முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும். இவ்வாறு அமைச்சர் பி.பழனியப்பன் கூறினார். பாரூர் பெரிய ஏரி திறப்பு தொடர்ந்து, போச்சம்பள்ளி தாலுகா பாரூர் பெரிய ஏரியிலிருந்து கிழக்கு மற்றும் மேற்கு பிரதான கால்வாய் மூலம் இரண்டாம் போக பாசனத்திற்கு 120 நாட்களுக்கு தண்ணீரை கலெக்டர் ராஜேஷ் திறந்து வைத்தார். கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ., முன்னிலை வகித்தார். இது குறித்து கலெக்டர் ராஜேஷ் கூறியதாவது:- பாரூர் பெரிய ஏரியிலிருந்து பாரூர், அரசம்பட்டி, பெண்டரஅள்ளி, கீழ்குப்பம், கோட்டப்பட்டி உள்ளிட்ட 7 ஊராட்சிகளில் உள்ள பல்வேறு கிராமங்களில் உள்ள நஞ்சை நிலங்கள் இந்த தண்ணீர் திறப்பினால் பாசன வசதி பெறுகிறது. அதன்படி கிழக்கு பிரதான கால்வாய் மூலம் 1,583 ஏக்கர் நிலமும், மேற்கு பிரதான கால்வாய் மூலம் 813 ஏக்கரும் என மொத்தம் 2,396 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகின்றன. இவ்வாறு

கலெக்டர் ராஜேஷ் கூறினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் வி.கோவிந்தராஜ், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் பாலசுப்பிரமணியன், உதவி செயற்பொறியாளர் சாம்ராஜ், உதவி கலெக்டர் முகமதுஅஸ்லம், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ரவிச்சந்திரன், மாவட்ட பால்வளத்தலைவர் தென்னரசு, மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் கேசவன், ஒன்றிய குழு தலைவர்கள் கோவிந்தராஜ், முனியப்பன், ஹேம்நாத், ஜமுனாகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர்கள் சோக்காடி ராஜன் (கிருஷ்ணகிரி), எம்.எஸ்.பிரபாகரன் (காவேரிப்பட்டணம்), ஓசூர் நகராட்சி தலைவர் பாலகிருஷ்ணரெட்டி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் சி.வி. ராஜேந்திரன், சி.பெருமாள், ஓசூர் நகர அ.தி.மு.க. செயலாளர் நாராயணன், மாவட்ட அண்ணா தொழிற்சங்க செயலாளர் மாதேவா, மாவட்ட பாசறை தலைவர் மாரேகவுடு, கவுன்சிலர் முரளி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## கோத்தகிரி பகுதியில் காளான் வளர்ப்பில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்



கோத்தகிரி,

கோத்தகிரி பகுதியில் காளான் வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

உறை பனி

நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மொட்டு காளான் மிகவும் பிரசித்தி பெற்றது ஆகும். நல்ல சுவை கொண்டதாக இருப்பதால் மக்களிடையே நீலகிரி காளான்களுக்கு வரவேற்பு உள்ளது. மேலும் திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகளில் காளான் முக்கிய உணவாக உள்ளது.

இதனிடையே தற்போது நீலகிரி மாவட்டத்தில் கடும் உறைபனி நிலவுகிறது. இதன் காரணமாக தேயிலை செடிகள் கருகி வருகின்றன. இதனால் விவசாயிகள் மாற்றுப் பயிர்கள் விவசாயம் செய்வதில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

காளான் வளர்ப்பு

இதையொட்டி கோத்தகிரி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் விவசாயிகள் காளான் வளர்ப்பில் ஆர்வம் காட்டி வருகிறார்கள். கோத்தகிரி பாண்டியன் பார்க், நெடுகுளா, எஸ்.கைகாட்டி உள்பட பல்வேறு இடங்களில் விவசாயிகள் மிகவும் ஆர்வத்துடன் காளான் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்

இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:–

காளான் உற்பத்தியை வணிக ரீதியாக செய்ய வேண்டுமெனில் 40 அடிக்கு 30 அடிக்கு நிழல் தரும் ஒரு குடில் அமைக்க வேண்டும். இதற்கு ரூ.1 லட்சம் வரை செலவாகும். அதில் 1200 காளான் வளர்ப்பு பைகளை அடுக்கி வைக்க முடியும். மேலும் ஒரு காளான் பை ரூ.120–க்கு கிடைக்கிறது. எனவே மொத்த முதலீடாக குடிலுடன் சேர்ந்து ரூ.2 லட்சத்து 50 ஆயிரம் செலவு ஆகும்.

2 மாதத்தில் உற்பத்தி

கோழி எரு, வைக்கோல் மற்றும் பருத்திக்கழிவு ஆகியவற்றுடன் கூடிய நல்ல விதைப்பைகளை கொள்முதல் செய்து அதிக வெப்பமோ அல்லது

அதிக குளிரோ இல்லாத நல்ல சீதோஷ்ண நிலை இருந்தால் 2 மாதத்தில் காளான் உற்பத்தி தொடங்கும்.

வெயில் காலத்தில் காற்றோட்டம் இருக்குமாறும், குளிர் காலத்தில் மூடியவாறும் குடில்கள் இருக்க வேண்டும். தினமும் காலையில் தண்ணீர் பாய்ச்சி சரியான வளர்ச்சியில் காளான்களை அறுவடை செய்து வரவேண்டும். ஒரு பையில் இருந்து 1 கிலோ முதல் 1½ கிலோ காளான் கிடைக்கும். 2 மாதத்துக்கு 1800 கிலோ காளான் அறுவடை செய்தால் ரூ.2 லட்சத்து 70 ஆயிரம் வரை கிடைக்க வாய்ப்புள்ளது. எனவே முதலீடு செய்த தொகையை 2 மாதத்திலேயே திரும்ப எடுத்துக் கொள்ள முடியும்.

கடன்

மேலும் கொள்முதல் மையத்தினர் முன்தொகையாக ரூ.2 லட்சம் வரை கடனாக வழங்கி காளான் கொள்முதல் செய்கிறார்கள். காளான் உற்பத்தி குறையும் போது பழைய பைகளை ரூ.20–க்கு விதை தருபவர்களே திரும்ப எடுத்துக் கொண்டு மீதத் தொகையை பெற்றுக் கொண்டு புதிய பைகளை தருகிறார்கள்.

காளான் உற்பத்தியை பொருத்த வரை நல்ல லாபம் தரும் தொழிலாக உள்ளது. இதன் காரணமாக விவசாயிகள் பலர் காளான் வளர்ப்பில் ஈடுபட தொடங்கி உள்ளனர்.இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## அவலாஞ்சியில் தவிட்டு பழங்கள் விளைச்சல் அதிகரிப்பு



ஊட்டி

நீலகிரி மாவட்டத்தில் அதிகளவில் வனப்பகுதிகள் காணப்படுகிறது. இங்கு பல்வேறு வகையான காட்டு பழங்கள் விளைகின்றன. மேலும் மாவட்டத்தில் விவசாயிகள் மூலம் பீச்சீஸ், வால்பேரிக்காய், ஆரஞ்சு, பிளம்ஸ் உள்பட பல்வேறு பழங்கள் விளைவிக்கப்படுகின்றன. தற்போது பனிக்காலம் என்பதால் பழங்களின் விளைச்சல் குறைந்துள்ளது. மேலும் பனியினால் காய்கறி விவசாயமும் பாதிக்கப்பட்டுள்ளன.

அதே நேரத்தில் பனிக்காலத்தில் காய்க்கக்கூடிய பழங்களான தவிட்டு பழங்கள் தற்போது காய்க்க தொடங்கி உள்ளன. குறிப்பாக ஊட்டி அருகே உள்ள அவலாஞ்சி வனப்பகுதியில் தவிட்டு பழங்களின் விளைச்சல் அதிகரித்துள்ளது. மரங்களில் பழங்கள் காய்த்து குலுங்குவதை பார்க்க ரம்மியமாக உள்ளது. குறிப்பாக அந்த வழியாக

செல்லும் சுற்றுலா பயணிகள் அதனை பார்த்து ரசித்தபடியே செல்கிறார்கள். ஒரு சிலர் கீழே விழும் பழங்களை பொறுக்கி கொண்டு செல்கிறார்கள். இதே போன்று நீலகிரி மாவட்டத்தில் பனிக்காலத்தில் மலரக்கூடிய மலர்களும் பூக்க தொடங்கி உள்ளன.

**கறம்பக்குடி பகுதியில் அறுவடைக்கு தயாராக உள்ள மஞ்சள் கொத்துக்கள்**



கறம்பக்குடி,

கறம்பக்குடி பகுதியில் பொங்கல் திருநாளுக்காக சாகுபடி செய்யப்பட்டுள்ள மஞ்சள் இலை கொத்துக்கள் தற்போது அறுவடைக்கு தயாராக உள்ளன.

மஞ்சள் கொத்துக்கள்

தை திருநாளாம் பொங்கல் திருநாளை இயற்கையின் வழிபாட்டு விழாவாகவே தமிழர்கள் கொண்டாடி வருகின்றனர். புத்தரிசி, கரும்பு, மஞ்சள், வாழை என பொங்கலுக்கு பயன் படுத்தப்படும் பொருட்கள் அனைத்தும் இயற்கை நமக்கு அளித்த வரமாகும். அதிலும் குறிப்பாக மங்கள பொருளான அறியப்பட்டுள்ள மஞ்சளின் மகிமை

மகந்தானதாகும். உணவை மருந்தாக்கி தந்த நமது முன்னோர்கள் மிகச்சிறந்த கிருமிநாசினியான மஞ்சளை உணவு பொருளாகவும் வழிபாட்டுகுரியதாகவும் போற்றி வந்தனர். பொங்கல் திருநாளுக்கு மஞ்சள் கொத்துக்களை பானைகளில் சுற்றி கட்டி வழிபடுவது வழக்கம்.

இதனால் விவசாயிகள் பொங்கலுக்கு 6 மாதங்களுக்கு முன்பு மஞ்சள் சாகுபடியை தொடங்கி விடுவர். கறம்பக்குடி பகுதியில் பயிர் செய்யப்பட்டுள்ள மஞ்சள் கொத்துக்கள் தற்போது சாகுபடிக்கு தயார் நிலையில் உள்ளன. அதிக மஞ்சள் கிழங்குகளுடன் செழித்து வளர்ந்துள்ள மஞ்சள் கொத்துகளை புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் திருச்சி மாவட்டத்தை சேர்ந்த வியாரிகள் பார்வையிட்டு விலைபேசி முன்பணம் கொடுத்து செல்கின்றனர்.

ஆத்ம திருப்தி...

இது குறித்து மஞ்சள் சாகுபடி செய்துள்ள விவசாயி ஒருவர் கூறியதாவது:–

எங்கள் குடும்பம் மஞ்சள் கிழக்கு சாகுபடி செய்வதை பலதலை முறையாக செய்து வருகிறது. இதில் குறைந்த லாபம் என்ற போதிலும் பூஜை பொருள் என்ற வகையில் ஆத்ம திருப்தி உள்ளது. இந்த ஆண்டு மஞ்சள் சாகுபடி இந்த பகுதியில் குறைவு என்பதால் நல்ல விலை கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

சேவை என்பதே லாப நோக்கமாக மாறி விட்ட இந்த காலத்தில் ஆத்ம திருப்திக்காக மஞ்சள் சாகுபடி செய்யும் விவசாயிகள் போற்றபட வேண்டிவர்களே.